செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

	பக்கம்
பல்கலைக் கழகங்கள் அறிஞர் பெருமக்கட்கு 'டாக்டர் பட்டம்' வழங்கும் முறை	௧௧௧
சிவஞானபோத ஆராய்ச்சி	௧௧௫
உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்	௧௮௧
சங்க இலக்கியத்தில் மணிகள்	௧௧0
கன்னடத்தில் கன்னித் தமிழ்	௧௧௧
மாநகர் கண்ட மாபெரு வெள்ளம்	௨0௪
செய்திகளும் குறிப்புகளும்	௨0௫
மதிப்புரை	௨0௮

சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨00௭ கார்த்திகை, (Dec.'76) [பரல்-௪

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியம்,
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம்,
அடையாறு, சென்னை.

சா. புலவர் இரா. இளங்குமரன், திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

வள்ளுவர்கோட்டச் சிறப்பினை விளக்கும் கையேடுகள்

(Guide books for Valluvar Kottam)

VALLUVAR KOTTAM

This is a guide book in English for Valluvar Kottam. The historical background and glories of Tiruvalluvar and his Kural are given in this tiny booklet. The detailed descriptions of the structure, artistic value of the Kottam and of the mode of display of Tirukkural couplets in it are the note-worthy featuers of this booklet. 60 N.P.

வள்ளுவர் கோட்டம் (தெலுங்குப் பதிப்பு)

சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பு, சிறப்பு, கலைத் திறன் இன்னபிற செய்திகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந் திருப்பது போலவே தெலுங்கிலும் வெளிவந்துள்ளது. தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் வள்ளுவர் கோட்டத்தினைப் பற்றித் தெரிந்துகொள்ள இவ் அழகிய கையேடு தக்க வழிகாட்டி யாகும். 50 காசு

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫௧	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௭, கார்த்திகை டிசம்பர் 1976	பரல் ௪

பல்கலைக் கழகங்கள் அறிஞர் பெருமக்கட்கு 'டாக்டர் பட்டம்' வழங்கும் முறை

பல்கலைக் கழகங்கள் கல்லூரிகளில் பணியாற்றுவோர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பல்கலைக்கழகத்தில் 'Ph.D' என்னும் பண்டாரகர் (Dr.) பட்டம் பெறுவதும் உண்டு. அப்படிப் பெறுபவர் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டமோ, எம். லிட். பட்டமோ முன்னமே பெற்றவராகவும் பல்கலைக்கழகம் ஒப்புக் கொண்ட Ph. D. பட்டம் பெற்ற பேராசிரியர் ஒருவரின்கீழ் ஆராய்ச்சி மாணவராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டவராக வும் இருத்தல் வேண்டும். மேலும் அப் பேராசிரியரின் குறிப் பின்வழித் தம் ஆராய்ச்சியை எழுதுவதோடு நேர்முகத் தேர்வுக் கும் உட்பட்டு வெற்றி பெறுதல் வேண்டும். இவ் வகையில் பட்டம் பெற்றோர் திருவாளர்கள் அ. சிதம்பரநாதச் செட்டியார், மு. வரதராசனார், வ. சுப. மாணிக்கம், மா. இராசமாணிக்கனார், சி. இலக்குவனார் முதலியோர் ஆவர்.

மற்றும் இலக்கியத் துறையிலோ வேறுபிற அறிவுத் துறை களிலோ பெரும் புலமையும் திறமையும் உள்ளவர்களுக்கு மதிப் பார்ந்த (Honorary) D. Litt. என்னும் முனைவர் (Dr.) பட்டம் வழங்கப்படுவதும் உண்டு. இவ் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம் 1932 ஆம் ஆண்டு முதுபெரும் புலவர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கட்கும், 1957 ஆம் ஆண்டு நிகழ்ந்த பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவில், அப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய் இருந்த சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர் கட்கும் D. Litt. என்னும் இம் மதிப்புப் பட்டம் அளித்தது. திரு.

பிள்ளை யவர்கட்குப் பட்டம் வழங்கியபோது மேலும் அறிஞர் பெருமக்கள் ஒன்பதின்மருக்கும் இப் பட்டம் வழங்கப்பட்டது.

1930 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 9-2-55 இல் நடைபெற்ற அதன் வெள்ளிவிழாவில் ஆங்குத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றிய நாவலர் சோம சுந்தர பாரதியாருக்கு அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னரே D. Litt. என்னும் இம் மதிப்புப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அது போது அறிஞர் பெருமக்கள் மற்றும் அறுவர்க்கும் இப் பட்டம் அளிக்கப்பட்டது.

1971 ஆம் ஆண்டு ஆகஃச்டுத் திங்களில் அப்போதைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞர் மு கருணாநிதி அவர்கட்கு முனைவர் (D. Litt.) என்னும் இம் மதிப்புப் பட்டம் அளிக்கப் பட்டது.

1966 பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாள் மதுரை மாநகரில் தொடங்கப்பெற்ற மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கட்கு அப் பல்கலைக் கழகமே (D. Litt.) மதிப்புப் பட்டத்தை 1967 செப்டம்பர்த் திங்களில் முதன்முதலாக வழங்கியது. அடுத்துப் பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகட்கு ஒளிநெறி, ஒளி நெறிக் கட்டுரைகள் எழுதிய ராவ்பகதூர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம் ஏ. அவர்கட்கு 1-9-69 இல் நடந்த பட்டமளிப்பு விழாவில் இம் மதிப்புப் பட்டத்தை வழங்கியது. அப்போது திரு. பிள்ளையவர்கட்கு அகவை 87 ஆகும். அடுத்து அப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் துணைவேந்தராக அமர்ந்திருந்தபோது தமிழ் நாட்டின் அப்போதைய கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கட்கு 23—1—72 இல் இந்த D. Litt. பட்டம் அளிக்கப் பட்டது. 5—11—76 இல் இப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாப் பேருரை யாற்றிய நடுவணரசு நிதியமைச்சர் பெருமதிப் புக்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கட்கு இம் மதிப்புப் பட்டம் அளிக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியது.

இனி, அரும்புலமையும் பெருந்தகுதியும் வாய்க்கப் பெற்ற பெருமக்கள் பலர் இந்த D. Litt. மதிப்புப் பட்டம் பெறுமலே மறைந்து போயினர். அவர்களை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்: சென்னைச் சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணி புரிந்த தாகூர் சட்ட விரிவுரையாளர் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்களும், திருவிளையாடற்புராணம்,

சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு ஆகிய பேரிலக்கியங்கட்கு விளக்கவுரை எழுதியவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவரும் ஆகிய நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்களும், திருக்குறள் முழுமைக்கும் குமரேச வெண்பாவுடன் உரை 5 தொகுதிகள், புலவர் உலகம்—கம்பன் கலைநிலை 15 தொகுதிகள், தருமதீபிகை 7 தொகுதிகள், பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் 2 தொகுதிகள் முதலிய அரிய நூல்களை இயற்றி வெளியிட்ட பன்மொழிப் பேரறிஞர் கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனார் அவர்களும், சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திற்குப் பேருரை எழுதி 7 பெருந்தொகுதிகளாக வெளியிட்ட சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களும், சூளாமணி, பெருங்கதை, நீலகேசி, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கல்லாடம் முதலிய இலக்கியங்கட்கும், ஐங்குறுநூறு, பரிபாடல், குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, பத்துப்பாட்டு, ஐந்திணை ஐம்பது, ஐந்திணையெழுபது ஆகிய சங்க இலக்கியங்கட்கும், புறப்பொருள் வெண்பா மாலைக்கும் உரைவிளக்கம் எழுதியவரும் செவ்விய உரைநடையும் பாவும் இயற்றும் ஆற்றல் வாய்ந்தவரும் ஆகிய பெருமழைப் புலவர். பொ. வே. சோமசுந்தரனார் அவர்களும், தமிழ்ப் பேரகராதித் தொகுப்புக் குழுத் தலைவராகவும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வாசக (Reader) ராகவும் இருந்த பேரறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்களும், பிறரும் ஆவர்.

இனி மறைத்திரு மறைமலையடிகளார் தம் மதிப்பிற்குகந்த நன்மாணவரும், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார், தணிகைமணி செங்கல்வராயர் ஆகியோர் பாராட்டுக்குரியவரும் கழகத்தில் சில யாண்டுகள் புலவராகப் பணியாற்றியவரும், தொல்காப்பியக் குறிப்புரை, சங்க இலக்கிய இன்கவித் திரட்டு 3 பகுதிகள், சங்கநூற் கட்டுரைகள் 2 பகுதிகள், பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை, மறைமலையடிகளின் திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை உரை முதலிய அரிய பல நூல்களை இயற்றியவரும், மாம்பாக்கம் குருகுலத் தலைவரும் ஆகிய இளவழகனார் என்ற தவத்திரு அழகரடிகளாரும், முதல் தாய்மொழி, திரவிடத்தாய், ஒப்பியன் மொழிநூல், வேர்ச்சொல் கட்டுரைகள், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் முதலிய பல அரிய நூல்களை இயற்றியவரும், 'சொற்பிறப்பியல் அகரமுதலி' எழுதிச் சில பகுதிகள் வெளியிட்டுக் காலஞ்சென்ற யாழ்ப்பாணம் தவத்திரு ஞானப் பிரகாச அடிகளாருக்குப்பின் அத்துறையில் ஒப்பற்ற பெரும் புலமை வாய்ந்தவர் என்று ஆசிரியர் மறைத்திரு மறைமலையடி

களார் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவரும் இப்போது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராகப் பணியாற்றுபவரும் ஆகிய மொழிநூல் மூதறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களும், புறநானூறு, நற்றிணை, யசோதர காவியம், ஞானாமிர்தம் முதலிய அரிய நூல்கட்கு உரை கண்டவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைத் தியாகராயர் கல்லூரியிலும், பேராசிரியராகத் தமிழ்ப்பணியாற்றியவரும் ஓய்வு பெற்றபின் இக்கால வள்ளல் நா. மகாலிங்கம் அவர்களின் ஆதரவின்கீழ்த் திருவருட்பாவுக்கு உரையெழுதி வருபவரும் ஆகிய உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்களும், சங்க இலக்கியங்களுடன் அறிவியல் நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து சங்க இலக்கியத்தில் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள், மீன்கள், மணிகள் ஆகிய நூல்களை எழுதியுள்ளவரும், இன்னும் இவைபோலும் அரிய நூல்களை எழுதுதற்குக் குறிப்புகள் தொகுத்து வைத்துள்ளவரும், புதுவைச் சட்டமன்றச் செயலரும் ஆகிய பி. எல். சாமி அவர்களும் இவர்களைப் போன்ற பெருமக்கள் சிலரும் D. Litt. என்னும் மதிப்புப் பட்டம் பெறுதற்குப் பெரிதும் தகுதியுடையவர்கள் என்பதை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

இவர்களுடைய அறிவாற்றல்களைப் போற்றிப் பல்கலைக் கழகங்கள் மதிப்புப் பட்டங்கள் வழங்கினால் அறிவாற்றல் மிக்க இளைஞர்கள் தாமும் இம் மதிப்புப் பட்டம் பெறுதற்குரிய தகுதி பெற முயற்சிசெய்வர் என்று உறுதியாக நம்பலாம்.

D. Litt. என்னும் மதிப்புப் பட்டம் பெறுதற்குத் தகுதியுடைய பேரறிஞர் பெருமக்களைப் பற்றிப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுவினர்க்குப் பரிந்துரைக்கும் பொருட்டுத் தமிழ்நாட்டில் பல்துறைப் பேரறிஞர் பெருமக்களைக் கொண்ட 'தமிழ்ப் பேரறிஞர் கழகம்' ஒன்று அமைக்கப் பெறுதல் இன்றியமையாததாகும் என்பது கருதுதற் குரியது.

வ. சுப்பையா.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சித் திட்டம்

செந்தமிழ்ச் செல்வி பரல் உல் வெளிவந்த அறிக்கையினைக் கண்டு 'அனிச்ச அடி' என்னும் நாடக ஆசிரியர் புலவர் ஆ. பழநி அவர்கள் தமது நூலுக்குக் கிடைக்கப்பெறும் விற்பனை ஊதியம் தமது வாழ்நாளுக்குப் பின் மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு வழங்கப் பெறும் என்று ஆவணம் எழுதி அனுப்பியுள்ளனர். கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை 1976 அக்டோபர்த் திங்கள் முதல் ஒவ்வொரு திங்களும் ரூபா நூறு மட்டும் முறையே வழங்கிவருவதாகத் தெரிவித்து வழங்கி வருகின்றனர். சென்னைப் பொறித் துறையில் செயல்துறை சார்ந்த பொறிஞர் Executive Engineer) திரு. ப. தண்டபாணி அவர்கள் ரூபா இருபதுக்குக் காசோலை அனுப்பிவைத்தனர். இம்முறையினை அறிஞர் பெருமக்கள் பின்பற்றுவார்களாக!

சிவஞானபோத ஆராய்ச்சி

[தவத்திரு அழகரடிகள்]

(சிலம்பு ௫௧, பரல் ௩, பக்கம் ௧௩௧இன் தொடர்ச்சி)

எடுத்துக்காட்டாகக் குழந்தைகளைப் போலச், சிறுபக்குவச் சிந்தனையாளரும் உலகில் உண்டு. கண்கூடாகக் காணும் காட்சியைமட்டுங் கொண்டு, அவர்கள் சிந்தனை சென்றது. உண்பது, காண்பது, தொட்டறிவது, மோந்தறிவது இந்த நான்கும் பொதுவாகக் குழந்தைகள் உடம்புக் கருவிகளின் மூலம் அறிந்துகொள்கின்றனர். ஐந்து வயதுக்கு மேலே தான் ஆசிரியர்களிடம் அவர்கள் விடப்படுகின்றனர். அது வரையில் அவர்களுக்குச் சிறந்த 'கேள்விச் செல்வம்' இல்லை; செவிச் செல்வமாகிய உரை யளவையை அவர்கள் தகுதியாகப் பெருமலிருக்கின்றனர்.

பிறந்த குழந்தை முதலில் தொடுதல் உணர்ச்சி பெறுகிறது; எடுத்தால் இன்புறுகிறது. சுவைக்கத் தெரிந்து கொள்கிறது; பால் உண்ணுகிறது. பின்பு பார்க்கத் தெரிகிறது; தாயார் முதலியவர்களையும் சுற்றுப்பக்கங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்கிறது; நாள் ஆக ஆக, மோந்தும் அறிகிறது. ஓரளவு ஓசைகளையும் பின்பு அறிகிறது. நல்ல கருத்துக்களைக் கேட்பதற்குச், செவியால் அவற்றை அறிய வேண்டியிருப்பதனாலும், அதற்கு எழுத்தொலி முதன்மை கொள்வதனாலும், அது சற்று முதிர்ந்த பருவத்தில் அமைகிறது. ஆண்டு முதிர முதிரக் கேள்வியறிவு உயர்கிறது; மற்றக் கருவியறிவுகள் அவ்வளவு வேறுபாடு கொள்வதில்லை.

முதல் நான்கு உணர்வுகள் மட்டும் கொள்வோர் அதனால் குழந்தைகளைப் போல் இருக்கிறார்கள். வயதில் மூத்தவர்களானாலும் பக்குவத்தில் அவ்வகை மக்கள் குழந்தைச் சிறு பருவம் உடையவர்களே!

முதல் நான்கு உணர்வுகளும், 'நிலம்' 'நீர்' 'தீ' 'காற்று' என்னும் நான்கு உலகப் பொருள்கள் வாயிலாகக் கிடைக்கின்றன. உலகம், இந்த நான்கு பொருள்கள் மட்டுந்தான் உடையது என்று அச் சிந்தனைக்காரர் முடிவுகட்டிவிட்டனர். காட்சி யளவாய்த் தெரிபவை அவ்வளவே! தருக்கத்தில் வரும் காட்சி யளவை மட்டும் இவர்கள் கொண்டனர். நேரிற் காண்பது இவ்வளவேயாதலால், செவிகளிருந்தும் எழுத்தொலி முதலியன

கேட்கும் வகை பெருமல் மற்றப் புலன்களைப்போல், ஓரளவே பயன்படுதற்கு அவையும் உள்ளன என்று நினைத்துக்கொண்டு 'மெய்' 'வாய்' 'கண்' 'மூக்கு' என்பவற்ருேடு மட்டும் நான்கு கருவிகளாக உடம்பு இருக்கிறது என்று துணிந்துவிடுகின் றனர்.

காண்டல் அளவை மட்டும் அவர்களுக்குத் துணை; நன்ருகக் கருதிப் பார்க்காததால் கருதல் அளவையில் அவர்கள் மிகுதியாகச் செல்வதில்லை. ஆகாயம் என்னும் வெட்டவெளி கண்ணுக்குப் புலப்படாமல் இருப்பதனுல், 'வான்' என்று ஒரு பொருள் இருப்பதாகவே அவர்கள் கொள்வதில்லை. வெட்ட வெளியின் இயல்பாக, ஓசை ஒலிகள் நிகழ்கின்றன. இவ் விரண்டும் எதனுல் எழுகின்றன? இவற்றில் 'ஓசை' என்பது என்ன, 'ஒலி' என்பது என்ன? என்று அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆதலால், எழுத்தொலிகளால் ஆன உரை யளவையையும் அவர்கள் அறிவதில்லை. 'ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே' என்பது அப்பர் தேவாரம்!

இத்தகைய மக்கள், 'நிலம்' 'நீர்' 'தீ' 'காற்று' என்னும் நான்கு பொருள்களால்மட்டும் இன்புறுகின்றனர்; செவியால் இன்புறுவது பொது; அது ஓரளவுதான்! உலகியல் என்பதும் வாழ்க்கை என்பதும், கண்கூடாக இந்த நான்கு பொருள் களையும் இவற்றின் நுகர் கருவிகளாக உடம்பில் உள்ள 'மெய்' 'வாய்' 'கண்' 'மூக்கு' என்பவற்றையுமட்டும் அறிந்து, அவற்றில் திளைப்பதுதான் என்பது இவர்கள் எண்ணம். 'உண்பது' 'பார்ப்பது' 'தொடுவது' 'மோப்பது' இவற்றை மட்டும் செய்துகொண்டு நன்கு வாழலாம் என்று இவர்கள் முடித்துவிட்டார்கள்; கருதலும், பெரியோர் சொல் கேட்டலும் இவர்களுக்கு இல்லை; இவ்வாறு ஓரளவில் வாழ்க்கையை இவர்கள் திட்டப்படுத்திக் கொண்டனர். இவர்களை, உலகிய லார் (உலகாயதர்) என்று சொல்லலாம்!

பெரியோர் மறைநூல்களை இவர்கள் அறியமாட்டார்கள். காணுப் பொருளாகிய உயிரையும் உயிர்க்குயிராகிய கடவுளையும் இவர்கள் கருதுவதில்லை. அதனுல் உயிரின்பமோ கடவு ளின்பமோ இவர்கள் நுகர்வதுமில்லை.

இன்பம் என்பதெல்லாம் நாற்பொருள் இன்பங்களே; மாதர் இன்பமாக இவர்கள் கருதுவதும் இந் நாற்பொருள் இன்பமே; திருக்கோவையார் முதலிய நூல்களில் வரும் அகப் பொருள் இன்பங்களை (அன்பு அருளின்பங்கள்), இவர்கள் அறிய மாட்டார்கள். திருவாசகம் முதலிய அருள் நூல்

இன்பமும் இவர்களுக்குத் தெரியாது. இன்பம், செவியாலும் மாட்சிமைப்படவில்லை.

நாற்பொருட் பாதுகாப்பிற்காகவே அரசு உள்ளது என்பது இவர்கள் கருத்து; வாழ்க்கையில் தொல்லை நேராதபடி அரசு முறைகளோடு ஒத்து நடப்பதுமட்டும் வேண்டும் என்று இவர்கள் கருதினார்கள்.

'மண்' 'நீர்' 'தீ' 'காற்று' என்னும் நான்கு பொருள்களால் மட்டும், உலகத்தில் விளையும் ஓரளவு மாதர் இன்பங்கள் போல்வன நுகர்ந்துகொண்டு, அரசு முறைகளின்படி உயிர் வாழ்ந்து வருவதே நேரான கண்கண்ட வாழ்க்கையாயிருக் கிறது என்பது இவர்கள் கொள்கையும், நடத்தையும்.

'உயிராவது மண்ணாவது; சாமியாவது பூதமாவது; எல்லாம் ஏமாற்றுப் பேச்சு; நல்வினை தீவினை, இன்ப உலகம் துன்ப உலகம், இப் பிறப்பு மறு பிறப்பு, என்பவெல்லாம் வீண்; வெற்றிலை பாக்குச் சுண்ணம்பு சேர்ந்தால் சிவப்பாக ஒரு நிறம் உண்டாக வில்லையா? அதுபோல நான்கு பொருள்கள் சேர்ந்த இந்த உடம்பில் ஒரு நினைவு தோன்றுகிறது; அவ்வளவு தான்; நான்கும் தளர்ந்தால் அந்த நினைவும் இல்லையாய் விடுகிறது. சாவு நேர்கிறது.

'அப்படி நேர்வதற்குள், கண்கண்ட உலக இன்பங்களைத் துய்த்துக் கொள்ள வேண்டும்; அதை இதை யெல்லாம் சொல்லித் துய்க்கக் கூடிய இன்பங்களையும் இழந்து விடுதல் அழகாகாது' என்று இவர்கள் தமது தொடக்க வாழ்க்கையைத் திட்டம் செய்து கொண்டார்கள்; இதுதான் குழந்தைப் பருவ வாழ்க்கை என்பது! பொது மக்கள் நிலை இது!

இவர்களும் வாழ்க்கைக்கு ஒரு திட்டம் கொண்டு, கொள்கையும் அதற்கேற்ற நடத்தையும், இவற்றை விளக்கும் நூல் என்று ஒன்றும் உடையவர்களாய் இருத்தலின், சமய வாதிகளில் இவ்வுலகாயதரையும் சேர்த்துப் புறச் சமயங்களிலும் புறச் சமயமாகவாவது இவர்கள் கருத்துக்கள் கொள்ளப் பட்டன; இவை சமய வாழ்க்கையில் தொடக்கமும் அடிப்படையு மாகும்.

இவர்களுக்கு மேல் சற்றுச் சிந்தனையுடையவர்கள், 'புத்தர்கள்'. மண், நீர், தீ, காற்று என்பவற்ருேடு கூடிய உடம்பில் அப் பொருள்களின் சேர்க்கையால் ஒரு நினைவு உண்டு என்று உலகாயதர் கூறப், புத்தர்கள் ஓர் அறிவு உண்டு என்பர். 'சமணர்கள்' அந்த அறிவை உடைய ஓர் உயிர் உண்டென்பர். இவர்களெல்லாம் புறப்புறச் சமயிகள்.

புறச் சமயிகளில், 'மீமாம்சகர்' என்பவர், காணப்படும் இந்த உலகம் எப்பொழுதும் அப்படியே நிலைகொண்டிருக்கும் என்பதோடு, உயிர்கள் வினைப்பயன்களை நுகர்ந்துவரும் என்பது முதலிய கருத்துக்கள் உடையவர்கள். இப்படிப் படிப்படியே சிந்தனை மேலிட்டவர்களாய்ச் சமயச் சிந்தனையாளர் இருக்கிறார்கள். இவருள் 'மாயாவாதியர்', கடவுள் சிந்தனையாளர்! அகப்புறச் சமயிகள், அகச் சமயிகள் என்போர், கடவுள் உயிர் உலகம் என்பவற்றின் சிந்தனைகளில், முறையே நடத்தைகளிலும் வீடுபேற்று நிலைகளிலும் வேறுபாடுடையவர்கள்; சைவ சித்தாந்தம் இவ்வெல்லாச் சிந்தனைகட்கும் அப்பாற்பட்டது.

இயைபு :

நூற்பாவின் மூன்று பிரிவுகளும் முதல் நூற்பாவைச் சேர்ந்தவை. (1) உலகம் முத்தொழில் உடைமையால், (2) ஒருவனுல் தோற்றுவிக்கப்பட்டு உள்பொருளாகிய அவை இறுதியில் ஒடுங்கி, அவ்வொடுக்கக் கடவுளிடமிருந்தே மீண்டும் தோற்ற முற வேண்டுதலின், (3) ஒடுக்குங் கடவுளே முதற் கடவுளுமாவார்.

தொழிலுடைமையால் 'மாயை உள்பொருள்' என்பது பெறப்பட்டது. 'தொழில் நிகழ்ச்சி' 'அதனுல் உள்பொருள்' என்னும் இரண்டு காரணங்களாலும் செய்வோன் ஒருவன் உண்டென்பது உறுதியாயிற்று.

இவ்வாறு ஒன்ருேடொன்று இயைபு உடையதாய் வருவதால், ஒரே நூற்பா ஆயிற்று.

உலகத்தைத் தோற்றுவிக்கும் 'நிமித்த காரண'னுகக் கடவுள் இருத்தலால், அப்படித் தோற்றுவிப்பதற்குத் 'துணைக் காரணங்கள், முதற் காரணங்கள்' எவை எவை? என்று அறிந்துகொள்ளும் கட்டாயம் ஏற்படுகிறது. முதற் நூற்பாவால் கடவுள் உண்மை தெரிந்ததனுல், இரண்டாம் நூற்பாவால் இக் கட்டாயத்தைப் புலப்படுத்த வேண்டிய நிலைமை உண்டாகிறது. அதனுல். ஏனைய காரணங்களின் உண்மை இரண்டாம் நூற்பாவில் வருகின்றது.

இவ்வாறு, இரு நூற்பாக்களுக்கும் இயைபு ஏற்பட்டது முதல் நூற்பாவின் மூன்று பிரிவுகளும் ஒன்ருேடொன்று இயைபு கொண்டமை போல, இந் நூற்பாக்களும் இயைபு கொண்டன.

வேதாந்த சித்தாந்தம் :

ஒரு காசுக்கு இரண்டு பக்கம் இருப்பதுபோல், ஒரே கோட் பாட்டுக்கு இவை இரண்டு பெயர்கள் இருக்கின்றன. இரண்டும் ஒன்றுதான், 'வேதாந்தம்' என்னும் நூலறிவு 'அபர ஞானம்'; 'சித்தாந்தம்' என்னும் திளைப்புணர்வு 'பர ஞானம்'. சித்தாந் தத்தை 'மெய்யுணர்வு' என்றும் சொல்லுவார்கள். வேதாந்த சித்தாந்தம் என்பது ஒரே நிலைதான் என்பதைத் தாயுமான அடிகள் அறிந்திருந்தார்கள்.

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை"

என்பது அவர் வாக்கு. வேதாந்த சித்தாந்தம் இரண்டையும் 'நன்னிலை' என்று அவர்கள் கருதியிருந்தமை இதனால் தெளி யப்படும். இருபத்து நான்கு சமயச் சிந்தனைகளுக்கும் இது வேருனது.

வேதாந்தம் என்பதை 'மாயா வாதம்' என்று சிலர் சொல்லுவது தவறு; 'மாயா வாதம்' வேறு, இங்கே கூறப்படு கின்ற 'வேதாந்தம்' வேறு. 'கடவுள்' 'உலகம்' 'உயிர்' என் னும் முப்பொருட் கொள்கைகளும் வேதாந்தம் சித்தாந்தம் இரண்டுக்கும் உண்டு. 'மாயாவாதம்' என்பதற்கு முப்பொருட் கொள்கைகள் இல்லை. 'மாயை'யால் ஆன உலகம் என்பதும், அதனில் விளங்கும் உயிர் என்பதும், மாயாவாதத்துக்கு இல்லை. வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் முறையே நூலறிவு (உலக அறிவு; அபரஞானம்) மெய்யுணர்வு என்னும் வேறுபாடு இருத்தலின், ஒரே கொள்கைக்கு இருபெயர்கள் அமைந்திருக்கின்றன. மற்றபடி இரண்டும் ஒன்றே.

வேதாந்தப் பரவல் :

வேதாந்தத்தில் பலர் ஈடுபடக் கூடும். சித்தாந்தத்தில் மிகச் சிலரே திளைப்புணர்வு பெறுவர். இவ்வுண்மையைத் தெளிவிப்பதற்காகவே, குமரகுருபரர், 'சித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலரே' என்று திருவாய்மலர்ந்தருளினர். இரு பத்து நான்கு வகையான சமயங்களிலும் உலகத்திற் பலர் ஈடு படக் கூடும். வேதாந்தத்திலும் சுருக்கமாகப் பலர் அமைய லாம். மக்கட் கூட்டத்தில் பெரும்பான்மையினரைச் 'சித்தாந் தத்'தில் எதிர்பார்க்க இயலாது.

குமரகுருபரர் தெளிவித்ததில் இன்னும் ஒன்று இங்குத் தெளிவாகவே இருக்கிறது; வேதாந்தம் என்பதைப் 'பழம்' என்று ஒரே பொருளாக அவர் கூறினர். 'சாறு' அதன் பிழிவு;

பழத்தில் சாறு உள்ளது. வேதாந்தத்தில் சித்தாந்தம் உள்ளது! பழமும் சாறும் சேர்ந்துதான் பழம்' எனப்படும். அதைப்போல, வேதாந்தமும் சித்தாந்தமும் சேர்ந்துதான் ஒரு கொள்கை யாகும்.

பழத்தைப் பெறுவது பலர்க்கு இயலும்; ஆனால், அதன் சாற்றைப் பிழிந்து அருந்துவது எல்லார்க்கும் வாய்க்காது; பழங்களைத் தோட்டத்திலிருந்து பறிப்பவர், கடையில் விற்பவர், வாங்குவோர், பலர். முடிவில், அதன் சாற்றைப் பிழிந்து உண்பவர் யாரோ சிலராகத்தான் இருக்கமுடியும். அதுபோல, சித்தாந்த நிலையில் அருளை நுகர்பவர் உலகத்தில் மிகச் சிலரே; வேதாந்த நிலையில் நூல்களைக் கற்றுக் கருத்துக்களை அறிவள வாக அறிபவர் உலகத்தில் பலர்; ஆகவே, வேதாந்தம் என் னும் பெயரில், வேதாந்த சித்தாந்தம் என்னும் கொள்கை, நாட்டில் மிகப் பரவலாகப் பரவி யிருப்பதை அறிகிறோம். சித் தாந்த நிலை முடிந்த முடிவாதலின், சிலர் இயக்கமாகவே அது திகழ்வதையும் காண்கின்றோம்.

இனி, இவ் வேதாந்த சித்தாந்த நிலையில், அதாவது சமய நெறிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாய் விளங்குகிற இந்த ஒரே கொள்கையில், தெளிந்திருக்க வேண்டிய கருத்துக்கள் சில உள்ளன.

முத்தொழில்:

ஒன்று: தொழில்.

இரண்டு: அத் தொழில் முத்தொழிலாகவும், அம் முத் தொழிலின் தோற்றமே நன்கு தெரிவதாகவும் இருக்கும்.

முத்தொழில்களாக இருப்பினும், தோற்றம் என்பதே (உற்பத்தி), மக்களுக்கு முதன்மையாயுள்ளது. சிலகாலம் அத் தோற்ற உருவத்தையே வைத்துக்கொண்டு இன்புறுகின்றனர். தோற்றம், நிலைகொண்டிருப்பது போல, அழிவு இல்லை. அழிவு, உடனே அழிந்துவிடும். ஆனால் தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழில்களில் தோற்றம் ஒன்றே எடுப் பாய்த் தெரிகிறது. அதனால் சிவஞான போதத்தில் 'தோற்றிய திதியே' என்று தனியாகக் குறித்துக் கொள்ளப்பட்டது. மீண்டும் தோற்றத்தைப் பற்றியே, 'உளதாம்' என்று கூறப் படுவதும் நினைவு கூர்க.

மூன்று: அத் தோற்றம், இறுதியடைவதிலிருந்தே உண் டாவதாகும். 'ஆதி' என்பது தோற்றம் என்பதோடு, முதன்

மையையும் உணர்த்துவதாகின்றது. 'அந்தம் ஆதி' என்னும் நூற்பாவின் மூன்ருவது கருத்து, நிலை என்னும் இருத்தலைக் கூருமல் இறுதியிலிருந்து தோற்றம் உண்டாதலை மட்டும் கூறுகிறது; நிலையைப் பற்றி அவ்வளவாகக் கருத்தில்லை; மேலும் அது, தோற்றத்தின் பின் நிகழ்வது!

இங்ஙனம் தொழில்கள், 'மூன்று தொழில்களாதல், தோற்றமே முதன்மை கொள்ளுதல், அழிவிலிருந்தே அத்தொழில்கள் ஆக்கம் பெறுதல்' என்னும் மூன்று கொள்கைகள் ஆகின்றன.

இத் தொழில்களை நடத்துவதற்கு நடத்துவோன் ஒருவன் இவற்றுக்கு வேருக வேண்டப்படுதலின், உலகத்தை உருவாக்கித் தொழிற்படுத்துகின்ற கடவுள் ஒருவர் உண்டு என்பது முதல் நூற்பாவில் கூறப்பட்டது.

> "அனைத்தினையும் தனித்தனியே தோற்றி நிலைபொருத்திச்
> சாற்றரிய வடிவு வண்ணம் சுவை பயன் உண்டாக்கும்
> சாமி திருவடிப் பெருமை"

எனவும்,

> "எண்ணுறும் இத் தின்மைகளும் இவற்றினது விகற்பம்
> எல்லாமும் தனித்தனியின் றிலங்க நிலை புரிந்தே
> விண்ணென்னும்படி அவற்றில் கலந்து கலவாது
> விளையாடும் அடிப் பெருமை"

எனவும், 'திருவருட்பா'விலும் (திருவடிப் பெருமை, 29, 32) வந்தது.

தொழிலாளர் பலர்:

தொழிற்சாலையை நிறுவுவோர் ஒருவர். தமக்குத் துணையாக வேறு சிலரை அவர் அமைத்துக் கொள்ளக்கூடும். அண்ட பிண்டங்களாகிய உலகம் ஒரு பெரிய தொழிற்சாலையாகும். இது மிகப் பெரிய தொழிற்சாலையாதலால் இதனை நடத்துங் கடவுளாகிய ஒருவர், உயிர்களில் மேம்பட்ட தேவர்களைத் தமக்குத் துணையாக அமைத்துக் கொண்டார். தொழிற்சாலையில் ஆக்கப் பெருக்கமே முதன்மை கொள்வது போல, இம் மாப்பெரும் உலகத் தொழிற்சாலையிலும் உருத்தோற்றமே முதன்மை கொள்ளுகிறது.

ஓர் அச்சு ஆலையை அல்லது நூற்பு ஆலையை எடுத்துக் கொள்வோம். இவற்றிற்கு உறுப்புக்கள் பல இருக்கின்றன. உறுப்புக்களை அமைத்து அவற்றை ஒன்று சேர்த்தால் ஆலைகள் உண்டாதலும் நமக்குத் தெரியும். உறுப்புக்களைத் தோற்றுவிப்பவரும் அவற்றை ஒன்று சேர்ப்பவரும் பலராய்ப் பணி

புரிவர்; தலைவர் ஒருவர் இருப்பார்; இயக்குநர் குழுவாயினும் அதற்கும் தலைவர் ஒருவர் இருப்பார். எல்லாம் ஒருவர் கருத்தின் வழி, நடைபெறும். இவற்றில் உறுப்புக்களை முதலில் உண்டாக்குதலே முதன்மை பெறுகின்றது.

உறுப்புக்களை முதலில் உண்டுபண்ணும்போது, அவை தக்கபடி உறுப்புக்களாகப், பயன்படும் வகையிற் பொருத்தமாகச் செய்யப்படும். அவை, அறியாமைப் பொருள்களால் உண்டுபண்ணப்படுதலையும் அறிவோம். ஏனென்ருல், அறியாமைப் பொருள்களிடத்தில் ஒரு நிலைத்த தன்மை இருக்கிறது. அதோடு, செய்யும் அறிவுப் பொருளின் அறிவுமுறைப்படி செயல்படும் இயல்பும் இருக்கிறது. அவை, தமக்கென்று ஓர் உரிமையும் இல்லாதவை; அவற்றிற்கு உரிமையிருந்தால், நாம் நம்பிச் செயல் செய்ய முடியுமா? மாலையில் நிறுத்திச் சென்று, மறுநாட் காலையில் வந்து இயக்க முடியுமா? இயங்கும்போதும் இயக்குவோர் கருத்துப்படி இயங்குமா? செய்யும்போதாவது செய்வோர் கருத்துப்படி அமையுமா? விற்பவர் நம்பி வாங்க முடியுமா? தொடர் வண்டிகள் இன்னின்ன நேரங்களில் இன்னின்ன இடங்களுக்குச் சேரும் என்று நேரம் வகுக்கமுடியுமா? அதனாலேதான், தொழில்களெல்லாம் அறியாமைப் பொருள்களில் (சடப் பொருள்களில்) நிகழ்கின்றன.

உறுப்புக்களுக்குப் பல பிரிவுகள் உண்டு. மேலும் அவை, குறித்து அறியப்படுவனவாய் இருக்க வேண்டும். இன்னது இன்ன வகையாக ஆக வேண்டும் என்பதற்கும், இன்ன பொருள்தான் இவ்வாறு ஆகக் கூடும் என்பதற்கும், இங்ஙனம் குறித்தறிதல் முக்கியமாகின்றது.

மூன்று காரணங்கள்:

அன்பர்களே, இங்ஙனமெல்லாம் அறியாமைப் பொருள்களை (சடம்) எடுத்துக்கொண்டு இவை இன்னதற்குப் பயன்படும் என்று குறித்தறியும் முறையில் (சுட்டறிவு), பல பொருள்களை இனம் இனமாகப் பிரித்துப் (பலவாய்), அவை உறுப்புக்களாகும் வகையில் அமைக்க வேண்டியிருக்கிறது. அதாவது: அவை, உறுப்புக்களாய்ப், பலவாய்ச், சுட்டி அறியப்படுவனவாய்ச், சடமாய், இல்லாவிட்டால், தொழில்கள் அவற்றில் நடைபெறுதல் இயலாது.

ஆதலால், சிவஞானபோத நூற்பா, உலகம் உறுப்புக்களாக இருத்தலால் என்று ஒரு காரணமும், அவை பலவாய்ச் சுட்டி அறியப்படுவனவாய் இருக்கின்றன என்று மற்ரெரு

காரணமும், விருப்பப்படியெல்லாம் தொழிற்படுவதற்கு அறியாமைப் பொருள்களாய் இருக்கின்ற இன்னொரு காரணமும், மூலப் பொருளாகிய மாயைக்குக் கூறுகிறது. 'மாயை' என ஒரு மூலப் பொருளின் உண்மையும் இதிலிருந்து தெரிகிறது!

சிவஞான முனிவர், தொழில்களுக்கு உரிய பொருள், இம் மூன்று வகையான இயல்புகளை உடையதாய் இருக்கவேண்டும் என்று கருதுகிறார்; அப்படிக் கருதுகின்ற நிலையில், இரண்டாவது காரணத்தைச் சொல்லும்போது, ''பல வேறு வகைத்தாய்ச் சடமாயும்'' என்பார்; 'பல வேறு வகைத்தாய்' என்பதை வேறொரு காரணமாகப் பிரிக்கவில்லை; பல பொருள்களாகப் பிரிவுபட்டால்மட்டுமே சடப் பொருள்கள் இன்னது இன்னது என்று குறித்தறிய முடியும்; ஆதலால் இரண்டையும் சேர்த்து ஒரு காரணமாகக் கூறினர். சிவஞானபோதச் சிற்றுரையில் முனிவர், முதலில் நூற்பாப் பொருள் கூறும்போது, ''பலவாய்ச் சுட்டியுணரப்படும்'' என்பார்; பின்பு காரணம் கூறும்போது, ''பலவேறு வகைத்தாய்ச் சடமாயும்'' என்பார்; இரண்டும் ஏறக் குறைய ஒன்றேயாயினும், ''பலவாய்ச் சுட்டியுணரப்படுவதாய்'' என்றே காரணமும் கொள்ளலாம்.

உயிர்களின் நிலை :

உறுப்புக்கள் என்னும் வகையில் அறியாமைப் பொருள்களேயன்றி உயிர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஏனென்றால், உயிர்களின் நலத்துக்காகவே தொழில்கள் செய்யப்படுகின்றன. ஆதலால், உயிர்களும் உறுப்புக்களாகக் கருதப்படும்; கருதப்பட்டாலும், அவற்றின் உடம்புகள் அறியாமைப் பொருள்களாதலை எல்லாரும் அறிவர். உறுப்புக்களில் உயிர்களைச் சேர்க்காவிட்டால் யாருக்காக இத்தொழில்கள் நடைபெறுகின்றன என்பது விளங்காமற் போதலோடு உலகத்தின் பிரிவுகளும் தெரியாமற் போகும். ஆதலால் உயிர்களையும் குறிக்க வேண்டுவது மெய்கண்டார்க்கு முதன்மையாகிவிட்டது.

தொழிற்படுவது அறியாமைப் பொருளேயாயினும், உயிர்கள் அதனோடு தோன்றியும் இருந்தும் அழிதலால், உயிர்களும் தொழிற்படுகின்றன எனப்பட்டது. உயிர்களின் பொருட்டே இத் தொழில் நிகழ்ச்சிகள் நிகழ்வதனாலும், உயிர்களில் தொழில்கள் நிகழ்கின்றன என்பது வழக்காயிற்று. ஏனை இரு தொழில்களையும் சேர்த்து உயிர்களில் ஐந்தொழில்களையும் நிகழ்த்துவான் இறைவன் என்றனர். ஆயினும் முத்தொழில் அறியாமைப் பொருள்களிலும் இரு தொழில் அறிவுப் பொரு

ளாகிய உயிரிலும் நிகழ்வதே இயல்பாதலின், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலை மட்டும் மெய்கண்ட தேவர் குறித்தார்.

கைவினை :

'தொழில்' என்பது, தோள் கொண்டு செய்யும் செயலாகும். இதனைக் 'கைவினை' என்றும் சொல்லுவதுண்டு; இறைவன் உலகத் தொழிற்சாலையில் இங்ஙனம் செயல் செய்வதைப்போல் மக்களும் அவனோடொத்துக் கைவினை செய்தல் வேண்டும். இறைவன் எப்போதும் ஐந்தொழில் நடத்திய வண்ணமாய் இருக்கிறான். அப் பெருமானைச் சேர்ந்திணங்கி இன்புற வேண்டுமென்றால், அவன் நல்லெண்ணத்தை மக்கள் அடையவேண்டாமா? அவன் நல்லெண்ணத்தைப் பெறுவது அவ்வளவு எளிதா என்ன?

உலகம் எவ்வளவு பெரியது? எத்தனை உலகங்கள் வானகத்தில் உள்ளன? கடவுள் அவை யெல்லாவற்றிலும் உயிரினங்களிலும் மிக நுண்ணியனாய் இரண்டறக் கலந்திருக்கிறான். அவன் நுண்ணுணர்வில், அணுவிலும் அணுவான மிகச் சிறிய நம்மைப்பற்றியும் கருத்திருத்துவது அவ்வளவு எளிதாகுமா? மாணிக்கவாசகரைப் போன்ற பெரிய ஞானஞானியே, "உடையாய் என்னைக் கண்டுகொள்ளே" என்று வேண்டுவாரென்றால், நாம் எந்த மூலை!

மேலும், கடவுள் நம்மை அறிந்துகொள்வது மட்டும் போதுமா? நம் செயல்களுக்கெல்லாம் அவன் திருவுளச் சம்மதமும் தருவதென்றால் அது, எவ்வளவு அருமை! மதுரையில் சமணர்களோடு வாது செய்வதற்குத் திருஞானசம்பந்தர், 'இதிற் பெருமானுக்குத் திருவுள்ளச் சம்மதம் இருக்கிறதா?' என்று விரும்பி, "வாது செய்யத் திருவுள்ளமே?" என்று கேட்டுச், 'சம்மதம் உள்ளது' எனத் தெரிந்துகொண்டு அதன் பின்பே வாதுக்குப் போனார்; திருவுள்ளங் கண்டு சென்றதனால், அவருக்கு வெற்றியும் உண்டாயிற்று.

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்தால், நம் வாழ்க்கை திருவருள் சம்மதப்படி, இயற்கை நெறிப்படி, அற முறைமைப்படி, நடக்க வேண்டுமே என்று தோன்றுகின்றது; அவனைப் போல் மக்களும் கைவினைகள் புரிந்து மக்கட்கு நலஞ்செய்து கொண்டே இருந்தால், அவன் திருவுளச் சம்மதம் கிடைப்பது எளிதாயிருக்கலாம். அப்படி இருக்கவேண்டும் என்றன்றோ விளங்குகிறது. பெருமானிடம் அன்பு செய்வது உண்மை

யானல், தோளால் (கையால்) தொழில் செய்வது எவ்வளவு முக்கியமாயிருக்கிறது! அண்மையில் காந்தியடிகள் அவ்வாறு விளங்கினர். உயிர்கள் பக்குவம் மிகுந்து, ஞானத்தால் தொழில் நிகழ்த்துவதானலும், உடம்பிருக்கும் வரையிற் 'கைவினை' முக்கியம்!

"கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்
நாம் அடியோம்"

என்று திருஞான சம்பந்தர், அடியார்கள் உய்வதற்கு வழி காட்டினர். அப்படிச் செய்தால், 'செய்வினை வந்து தீண்டா' என்று சொல்லித் துணிவூட்டத் 'திருநீலகண்டம்' என்று அதற்கு ஆணையும் வைத்தார்.

கைவினை இவ்வளவு முக்கியமாய் இருப்பதனல் மனம் வாக்குக் காயங்கள் படைத்த மக்கள், நினைப்பால் நினைந்து, சொல்லாற் சொல்லி வருவதோடு, செயலாற் செய்தலும் வேண்டும்; அச் செய்தலே தொழில்களாகும்.

இத் தொழில்கள் நினைந்து சொல்லிச் செய்வனவாதலின், செயலுக்கு வராத நினைப்பும் சொல்லும், ஒன்றும் உருவாவதில்லை. தொழில்களுக்கு உதவியாய், முன்னல் நிகழ்வனவே நினைப்பும் சொல்லும்; நினைப்பிருப்பதும் சொல் நிகழ்வதும் செயல் செய்வதற்காகவே உள்ளன; பொதுமக்களைவிட நன்ருய்க் கல்வி கற்ற சிறப்பு மக்களாகிய சான்ரேர்க்கும் அந்தணர் அறவோர்க்குமே, கைவினை செய்தல் முதன்மை!

அறநெறி :

செயலுக்கு வரும்போதுதான் அவை 'அறம்' எனப்படும். "அறம் செய விரும்பு" என்னும் ஒளவையார் வாக்கில், செய்தலே முதன்மை பெற்றது. "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாம் செயல்" என்னும் திருவள்ளுவர் திருமொழியும் காண்க. இந்த அறச் செயல்களே, தொழில்கள் என்பது; கைவினை என்பதும் இது; ஆண்டவனுடைய உலகத் தொழில்களும் இத்தகைய அறமே.

தொழிற்சாலைகளின் தொழில்களும் இங்ஙனம் அறச் செயல்களாக மிளிர்தல் வேண்டும். அறங்களாய், வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றை மட்டும், தொழிற்சாலைகளில் தொழில் தலைவர்களும் தொழிலாளரும் செய்தல் வேண்டும்.

இறைவனின் சார்பாளராகத் தொழில் தலைவர்கள் விளங்குகிருர்கள்; இதனை அவர்கள் மறத்தல் கூடாது. செயற்கை

நாகரிகம், இயற்கை நாகரிகத்தோடு ஒத்துச் செல்லுதல் நல்லது. கண்ட கண்ட தொழிற் சாலைகளைத் தோற்றுவித்து அறமல்லாத முறையிற் கண்ட கண்ட பொருள்களை உறுப்புக் களாக உருவாக்குதல் இறைவன் இயற்கையோடு மாறுபட்டுப் போகும்.

உலகத்தில் வறுமை தாண்டவமாடுவதெல்லாம், விலைவாசி களின் ஏற்றமெல்லாம், பணவீக்கங்களெல்லாம், இயற்கையோடு ஒத்துப் போகாத திரிபுத் தொழில்களாலேதாம் அமைகின்றன. நாட்டுப்புறங்கள் பாழாகின்றன. கல்வியும் இவ்வியற்கைக் கேற்றபடி இல்லை. அதனால், கற்றோர் பயனற்றவராய் அறச் செயலோடு மாறுபட்டவராய் வீணாகின்றனர். இறைவனிடம் அன்பு செய்வோரும் கைவினை ஏதும் புரியாமல், இறைவனோடு ஒன்றுபடப் பார்க்கிறார்கள். திருஞானசம்பந்தர் சொல்வதையும் கேட்பதில்லை; அவர் சமயகுரவர் என்று மதித்து நடப்பது மில்லை.

இயற்கைக்கு உதவியான தொழில்கள் எவை? அல்லாத தொழில்கள் எவை? என்பனவும், தொழில் தலைவர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பனி நாடுகளில், தானியப் பெருக்கம் கூலப் பெருக்கங்கள் மிகாத நிலையில், வேறு ஏதேதோ தொழில்களை அவர்கள் கண்டுபிடித்துச் செய்வது போலக், குளிரும் வெப்பமும் சமமான நிலையில் உள்ள நாடு களும் அவற்றைச் செய்வது பொருந்தமாட்டா. பனி நாட்டவர்களுக்கு அவர்களே துணைபுரிந்து கொள்வர். வெளி நாட்டு ஏற்றுமதி இறக்குமதிகளின் வாயிலாகப் பணவீக்கத்தை மிகுத்துக் கொள்ளுதல், இயற்கைக்குப் பொருந்தாது; இறைவன் நோக்கத்துக்கும் பொருந்தி வராது.

இறைவன் இயற்கையாகச் செய்ய வைத்திருக்கும் செயல்கள் பயிர்த் தொழில்கள்; 'உழவு' என்று ஒரே தொழி லதிகாரத்தைத் திருக்குறள் மறை நூல் உணர்த்துதலும் காண்க; உழவு தொழிலை விஞ்ஞான முறையிற் செய்வதற்குத் தொழிற்சாலைகள் முயலலாம்; இயற்கை என்னும் அறநெறியோடு ஒத்துப்போகும் அருமைப்பாடு இது!

இனி, உலகுக்கு உறுப்புகள் ஆகும் முறையில், பலவாய்ச் சுட்டி அறியப்படுவனவாய்ச் சடமாய், மாயை என்னும் ஒரு மூலப் பொருள் (மாயை) இல்லாவிட்டால் உயிர்களுக்கு உதவி யாக யாக்கைகளும் கரணங்களும் உலகங்களும் புழங்கு பொருள் களும் இறைவன் உண்டாக்குதல் என்பது, இயலாமற் போகும். அறிவுப் பொருளிலிருந்து இவற்றை உண்டாக்க முடியாது.

அறியாமைப் பொருளிலிருந்துதான் உண்டாக்க முடியும். அதற்கும் ஒரு முறைமை (கன்மம்) உள்ளது; உயிர்கள் அறியாமை இருளில் (ஆணவம்) அழுந்தியிராமற் போனால், இறைவனுக்குச் செயல் நிகழ ஏதுவில்லை; தனக்காகச் செய்து கொள்ள அவன் குறையுடையவன் இல்லையே!

இக் காரணங்களால், 'உலகம்' 'உயிர்' 'கடவுள்' என்னும் முப்பொருள்களும் மூலப் பொருள்களாக இருத்தற்கும், அவை தமக்குள் இயல்பாகவே அமைந்திருக்கும் இயைபுக்கும் இட முண்டாகிறது; ஆயினும், 'கடவுள் உண்மை' மட்டும் இம் முதல் நூற்பாவில் கூறப்படுவதற்குக் காரணம், இம் முப் பொருள் களிலும் அது முதன்மை கொள்வதும் பெரிய நிலையில் இருப்பதேயாகும்.

இனித், தொழில்கள் முதல் பிரிவிலும், தொழில் வகைகள் இரண்டாவது பிரிவிலும், தொழில் செய்வோர் மூன்றாவது பிரிவிலும் முதல் நூற்பாவில் கூறப்படுதலால், தொழில்களைக் கொண்டே அவற்றைச் செய்வோன் ஒருவன் வேண்டும், என்று முடிப்பது முக்கியமாகின்றது; அதற்காகத் தொழில்களைக் குறிக்க வேண்டியிருக்கிறது; இறைவன் புகழ் பாடுவதற்கு இது எவ்வளவு நல்லது! சிவஞானபோதம் காரண காரிய இயைபு களுடனல்லவா இறைவன் புகழ் பாடி அவன் இரக்கப் பண்பை யும் ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறது! தொழில் செய்ய வேண்டுவதற்குக் கட்டாயம், என்ன? என்பதற்கு, இறைவனது இரக்க இயல்பே காரணமாகும். உலகம் உறுப்புக்களைக் கொண் டிருக்கிறது என்பதனால் இது தெரிகிறது! இயற்கையைக் கொண்டுதானே நாம் எதுவும் துணியவேண்டியிருக்கிறது!

சமய நெறி இங்ஙனமெல்லாம் தெளியப்பட்டால்மட்டுமே, அதற்கு ஒத்த முறையில் தேவையறிந்து தொழில்களைத் திட்டஞ்செய்யத் தொழிற்சாலைகளுக்கு முடியும்; வாழ்க்கையிற் சமய நெறி முதன்மை கொள்ளாமை இரங்கத்தக்கது! கொள் ளாமை இயற்கையோடு மாறுபட்டது! இதனைத் தெளிவிப்பதற் காகவே திருவள்ளுவர் அறம் உரைப்பாராயினர்!

அடுக்கு முறை:

இனி, இத் தொழில் முறைகளை விளக்கும் மெய்கண்டார் தம் விளக்கங்களில், முறைகள் சிலவும் பின்பற்றியிருக்கிறார். முதல் நூற்பாவில் அவர் கூறும் சில கருத்துக்கள்:

1. உலகம் சடமானதனால், தோற்றுவிக்கப்பட்டது; எல் லாம் ஒரு காலத்தில் ஒருங்கே அழிந்துவிடும் நிலைமையும் மாயை ஒரே இனமானதனால் ஏற்படுகிறது;

2. ஆணவ இருளாகிய அறியாமை காரணமாக உலகம் மீளவும் தோற்றமுறுகிறது;

3. அப்படித் தோற்றமுறும்போது, எங்கே எப்படி ஒடுங்கியதோ அங்கிருந்தே அப்படி அது தோற்றமுறும்; அதுவும் கன்மங் காரணமாக.

4. அழிந்தது எதுவோ அதுவே முறைப்படி தோன்றும்.

5. முளைப்பதற்கு மூலம் விதையானாலும் நிலமும் அதன் ஈரமும் ஆதாரமாவதுபோல், உலகத் தோற்றத்துக்கு மாயை முதற் காரணமானாலும், இறைவனும் அருளும் இன்றியமையாமல் தேவைப்படும்.

6. ஒரு புழுவைக் குளவி தன்னைப்போல் ஆக்குதற்குக் காரணம் வினை;

7. காலத்தைப் போல், கனவு நிலையைப்போல், இறைவன் கட்டற்றவன்.

8. கடவுளால் உலகம் தோன்றிச் சில காலம் நிலை கொள்ளுவதைப் போல, அழிதலும் அவன் செயலே என்று அறிதல் வேண்டும்.

9. அதனால், அழிக்குங் கடவுளே ஆக்குங் கடவுளாக முதன்மை பெறுகின்றார்.

10. உயிர்கள், உலக நிலையிலும் அருள் நிலையிலும் இறைவனைச் சார்ந்து, அப்பெருமான் இயல்புகளால் இன்புற்று வரும்.

இங்ஙனம் மெய்கண்ட தேவர் முதல் நூற்பாவில் மேற்கொள்ளும் கருத்து முறைகளின் காரணங்களை இனி ஆராய்வோம். ஏனென்றால், காரணமல்லாமல் இவ்வாறு முறைகளை அவர் அடுக்கிக்கொள்ளமாட்டார்.

முறைகளின் விளக்கம்:

1. அழிப்புத் தொழில், சிவஞானபோதத்தில் முதன்மை கொள்ளுகிறது. உலகம் இப்படியே இருந்துவிட்டால் என்ன? ஏன் அழிய வேண்டும் என்பது 'உலகாயதர்' 'மீமாம்சகர்' கேள்வி; அறியாமைப் பொருள்கள் மூலப் பொருளிலிருந்து ஓர் உருவம் பெற்றால், மீண்டும் அந்த மூலப் பொருளில் ஒடுங்கி விடுதல் இயல்பு; இவற்றைத் 'தேய்மானம்' என்று கூறுவர். தேய்மானம் உண்டாதலால் அழிப்புத் தொழில் நிகழ்கிறது. மீண்டும் புதுமைப்படுத்தவும் முடிகிறது.

பழைய பொருள்களை அழித்தும், அகப்படும் மூலப் பொருளாகிய கருக்களைக் கொண்டும், தொழிற் சாலைகளில் தொழில்கள் நிகழவில்லையா? ஒரு சில ஒரு காலத்திலும், வேறு சில வேறு காலத்திலும், அழிவது இயற்கை; தோன்றிய காலம் ஒன்றாய் இருப்பவை, தேய்வு உண்டானபோது, அழிந்து போதலும் அதற்கேற்றபடி தேய்வுக் காலம் நேர்தலும் உண்டாகின்றன; நிலைமையைப் பார்த்து, உலகத்தின் உருவத்தை அதன் மூலப்பொருளில் ஒடுக்கிக், கடவுள், அழிவு செய்கின்றார். இங்ஙனம் ஒரு சேர உலகத்தை முற்றும் அழிப்பதற்கு அவர் கையாளும் முறை வியக்கத்தக்கதாய் இருக்கிறது!

i. தோற்ற ஒடுக்கங்கள்

உலகம் ஒடுங்கும்போது தோன்றிய முறையே மூலப் பொருளாகிய மாயையில் ஒடுங்கும். உலகம் என்னும் 'பருப்பொருள் மாயை' (பிரகிருதி மாயை), 'நுண்பொருள் மாயை' (மிசிர மாயை), இரண்டும் தூவா மாயைகள்; அவை உலகம் என்னும் பெயராலும் வழங்கும்.

தூவா மாயை (அசுத்த மாயை), தூய மாயை (சுத்த மாயை)யில் ஒடுங்கி, எல்லாம் நாதமாகும். நாதம், மூலப் பொருளாகிய 'மாயை' யாகும்; இப்பொழுது மண் முதல் நாதம் வரையில் எல்லாம் 'மாயை' என்னும் முதற் பொருளில் மாய்ந்து நிற்பதை அறிகிறோம்.

அதற்குமேல் உயிரும் கடவுளுமே உள்ளன. உயிரின் பொருட்டுக் கடவுள் மாயையிலிருந்து, மீண்டும் உலகை, முன் தோன்றிய முறையே, கருணையினால் தோற்றுவிக்கிறார். உயிர் உலகத்தை நாடி, அதிலிருந்து அருளையும் நாடுகிறது.

"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாருநாள் எந்நாளோ"

என்றார் தாயுமானார்.

உயிருணர்வில், இப்படி, உலகநிலையிலிருந்து அருள்நிலை விளங்குகிறது; உலக நிலை முதலில் நாதமாகவும் விந்துவாகவும் (ஒலியாகவும் ஒளியாகவும்) தோன்றுதலால் உலக நிலைகளையெல்லாம் 'நாத விந்துக்கள்' என்றும் சொல்லிவிடலாம்; அருவ நிலையில் உள்ள இவ்விரண்டும் 'சாதாக்கிய தத்துவத்'தில் 'ஓம்' என்னும் முத்தமிழ் மறை மொழிகளாய் அருவுருவமாகி, அதன்பின் உருவ உலகுகள் உண்டாகின்றன.

''நாதவிந்து கலாதீ நமோநம,
வேதமந்திர சொரூபா நமோநம''

என்பர் அருணை முனிவர்.

உலக நிலைகளாகிய நாத விந்துக்கள், உயிருணர்வு நிலையில் உயரும்போது, 'பர நாதம்' 'பர விந்து' எனப்படும்; அதற்குக் காரணமாக முனையும் சிவம் சத்திகள் 'பரை' எனவும், 'பரம் பரம்' எனவும் பெயர் கூறப்படும்; இந் நிலை வரையில் 'உயிருணர்வு நிலைகள்.' இவற்றிற்கு மேலேதான் 'அம்மையப்பர்' என்னும் முழுமுதல் இயல்பு நிலை!

ii. வீணை யொலி

உடம்பு ஒலி ஒளி வண்ணமாகி, உயிர் உணர்வில் விளங்கும் பரநாதமும், பரவிந்துவும் ஞானமாய்ச் செழித்து, உயிர்கள் வீடுபேற்றை அடையும் வகையில் ஓங்குமானால், அந்நிலையில் உயிர்க்கு மிக்க இன்பம் உண்டாகும். உயிர்கள் இந்நிலையில் விடுதலை உயிர்களாக ஓங்கிச் சிவத்தை அடையும்; மற்ற உயிர்களெல்லாம் பிறவிச் சூழலில் மீளத் தோன்றும். இங்ஙனம் இரு வகையாக (முத்தர் பெத்தராக) உயிர்கள் பிரிவு படும்போது,

''எம் இறை நல்வீணை வாசிக்குமே''

என்னும் வகையில், வீணை யொலியால் இறைவன் அவற்றைப் பிரிவு படுத்துவான். வீணை வாசித்து ஒரு சார் உயிர்களை விடுதலை நிலைக்குத் திருப்பிவிட்டு, மற்ற உயிர்களைப் பிறவியிற் சேர்ப்பான். இரண்டும் கருணையே. இதனை 'அறக் கருணை' 'மறக் கருணை' என்பர் மேலோர்.

iii. மின் வண்ணம்

வீடுபேற்றுக்குச் செல்லும் உயிர்கள், 'சீவன் முத்தராய்ப்' பிறவியிலேயே விளங்குவர். ஒலி யுடம்பும் ஒளி யுடம்பும் பெற்றிருப்பர். அவற்றால் அவர்கள் மிக்க இன்பம் அடைதலால், ஒளியாலும் ஒலியாலும் உடம்பைப் பெற அவர்கள் முயல்வது இயல்பே! அந்த முயற்சியைத் தவத்தில் 'யோக முயற்சி' என்பர்.

எல்லாம் வல்ல இறைவன் ஒளி ஒலிகளாலேயே அனைத்தையும் உண்டாக்குவான், ஒடுக்குவான். ஒலி வகை (எழுத்து, பதம், மறைகள்). ஒளிவகை (கலை, தத்துவம், புவனம்) என்னும் 'அத்துவாக்'களின் இருபிரிவிலும் இறைவன் மின் போல்வான்;

(தொடரும்)

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

வல்[1]—வளைவுக் கருத்து வேர்ச்சொல்

முழைத்தல் மொழி (Natural language) இழைத்தல் மொழி (Articulate Speech) என்னும் இருவகை மொழிகளுட் பின்னது பெரும்பாலும் உகரச் சுட்டடியாய்ப் பிறந்திருத்தலின், உகர மேறிச் சொன் முதலாகாத வகரமுதற் சொற்களெல்லாம் புல் என்னும் பகரமுதலடியினின்றோ முல் என்னும் மகர முதலடியி னின்றோதான் பிறந்துள்ளன.

எ—டு: பகு—வகு, பால்—வால் (வெள்ளை), பிள்—விள், பெள்—வெள் (விரும்பு)—வெய்.

மல்—வல், மழி—வழி, மானம்—வானம், மிஞ்சு—விஞ்சு.

முல்—மல்—வல்—வல்லம்=வட்டமான ஓலைக்கூடை.

வல்—வல்லி=வளைந்த கொடி "வல்லியனையாள்" (பு. வெ. பெண் பாற். 13. உரை) வல்லி—வ. வல்லீ.

வல்—வல. வலத்தல்=சூழ்தல். "நெடுங்கொடி வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்" (புறநா. 52).

மல்—மலார் (C. G.)=வளைந்த இளம் போத்து (taig).

தெ. மலாரமு.

மலார்—வலார். "வலாஅர் வல்லிற் குலாவரக் கோலி" (புறநா. 324). வலார்—வளார். "புளியம் வளாரால் மோதுவிப் பாய்" (தேவா. 1039 : 1). வளார்—வளாறு.

வல்—வலி. வலித்தல்=1. வளைத்தல். (சூடா.) 2. தண் டால் நீரை வளைத்துப் படகோட்டுதல். 3. முகத்தை வளைத்து வலிச்சங் காட்டுதல். 4. வில்வளைய இழுத்தல். "சார்ங்கம் வளைய வலிக்கும்" (திவ். நாய்ச். 5 : 8) 5. சுண்டியிழுத்தல். 6. இசிவுண்டாதல். 7. சுண்டி யிழுத்தாற்போல் நோவுண் டாதல். வலி=நோவு.

வல்—வலை=உயிரிகளைச் சூழ்ந்து அகப்படுத்தும் கயிற்றுக் கருவி. "புலிகொண்மார் நிறுத்த வலையுள்" (கலித். 65). 2. சூழ்ச்சி. "அகப்பட்டேன்..........வாசுதேவன் வலையுளே" (திவ். திருவாய். 5 : 3 : 6).

ம., தெ. வல, க. பலெ (b).

வல்—வள்—வள்ளம்=1. வட்ட உண்கலம், வட்டில். "வள்ளத் தவனேந்த......மதுமகிழ்ந்தார்" (சீவக. 2700). 2. நாழிகை வட்டில். (சூடா.). 3. மரக்கால் (பிங்.). 4. நான் மரக்கால் கொண்ட அளவு. (W.). 5. நான்கு அல்லது எட்டுப் படி கொண்ட அளவு. 6. சிறு தோணி. "வள்ளப்பட்டன மகர கடலென" (கம்பரா. அட்சகு. 28).

வள்ளக்கால்=வளைந்த கால். (இ. வ.).

வள்—வள்ளி=1. கொடி. "வாடிய வள்ளி முதலரிந் தற்று" (குறள். 1304) 2. கொடி போன்று தொடர்ந்து இருப்பது. "மேக வள்ளி" (தொல். புறத். 33, உரை).

வள்ளி—வள்ளியம்=மரக்கலம். (சது.).

வள்—வள—வளவு=வீட்டுச் சுற்றுப் பரப்பு, வீட்டுத் தொகுதி, வீடு. "வளவிற் கமைந்த வாயிற்ருகி" (பெருங். இலாவாண. 6 : 77). 2. வீட்டுப்புறம். (W.).

வள—வளர்—வளரி=பிறைபோல் வளைந்த வளரித்தடி (boomerang).

வள—வளா=சுற்றுப் பரப்பு. "குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று" (குறள். 523).

வளா—வளாவு. வளாவுதல்=1. சூழ்தல். "இளவெயில் வளாவ" (பரிபா. 15 : 27), "மகோததி வளாவும் பூதலம்" (கம்பரா. தேரேறு. 42). 2. சுற்றி மூடுதல். "பைந்துகில்...... வெம்முலைமேல் வளாய்" (சீவக. 2634).

வளா+அகம்=வளாகம்=1. வளைக்கை, சூழ்கை. (சூடா). 2. சூழ்ந்த இடம், இடம். "புலன்க ளைந்தும் வென்றவர் வளாகந் தன்னுட் சென்றிலேன்" (தேவா. 1193 : 1). 3. கடல் சூழ்ந்த உலகம். "முந்நீர் வளாக மெல்லாம்" (கலித். 146). 4. நிலப்பெருங் கண்டம். "ஏழ்பெரு வளாக வேந்தர்" (கம்பரா. திருமுடி. 6). 5. தேசம். "வேரோர் வளாகம துற்ருன்......... வணிகன்" (கந்தபு. மார்க். 142). 6. தினைப்புனப் பரப்பு. "குன்றும் யாறுங் குவடும் வளாகமும் (குற்ரு. தல. வேடன் வலம். 28). 7. தோட்டம். வளா—வளாஞ்சி=வளார். (இ.வ.)

வள்—வளி=வளைந்து வீசுங் காற்று. "வளிவழங்கு மல்லன்மா ஞாலங் கரி" (குறள். 245). 2. உடம்பிலுள்ள ஊதைக் கூறு. "வளிமுதலா வெண்ணிய மூன்று" (குறள். 941).

வள—வளை. வளைதல்=1. கோணுதல். 2. குனிந்து தாழ்தல். "முற்ற மூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கி

வளைந்து'' (திவ். பெரியதி. 1:3:1). 3. தோற்று வணங்குதல். ''குனியா வயவரும்'' (பு. வெ. 7:18). 4. திடமறுதல். (சீவக. 1068, உரை) 5. செங்கோல் வளைவது போன்று ஆட்சி நேர்மை யினின்று விலகுதல். ''வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்'' (சிலப். 19:16). 6. வருந்துதல். உடம்பு வளைந்து வேலை செய்வதில்லை. (உ. வ.) 1. ''வளையார் பசி யின்'' (பதினொ. திருவிடை. மும்மணிக். 21) 7. சுற்றுதல்.—(செ. குன்றுவினை) 1. சூழ்தல். ''வளைகடல் வலையிற் சூழ்ந்து'' (சீவக. 1115). 2. சுற்றி வருதல். ''வையக முழுதுடன் வளைஇ'' (புறநா. 69).

வளைய வளைய = திரும்பத் திரும்ப.

வளைத்தல் = 1. வளையச்செய்தல். 2. சூழ்தல். ''இருமுட் புரிசை யேமுற வளைஇ'' (முல்லைப். 27). 3. தடுத்தல். ''வள்ள னீங்கப் பெருய் வளைத்தேனென'' (சீவக. 889). 4. பற்றுதல். 5. கவர்தல். கொள்ளைக்காரர் எல்லாவற்றையும் வளைத்துக் கொண்டு போய்விட்டார்கள். 6. சொன்ன சொல்லை மாற்று தல். வளைத்து வளைத்துப் பேசுகிறுன். 7. வளைத்து எழுது தல். 'உருவப் பல்பூ வொருகொடி வளைஇ'' (நெடுநல். 113). 8. அணிதல். ''சடைமுடிமேல் முடிவெண்டிங்கள் வளைத்தானை'' (தேவா. 871:1).

வளை = 1. வளையல். ''முன்கை யிறையிறவா நின்ற வளை'' (குறள். 1157). 2. சக்கரப்படை. ''தாங்கணைப் பணிலமும் வளையும்'' (கம்பரா. உருக்காட்டுப். 43). 3. சங்கு. ''வளை யொடு புரையும் வாலியோற்கு'' (பரிபா. 2:20). 4. வட்டத் துளை, எலி நண்டு முதலியவற்றின் வளை. 5. சுற்றிடம். ''பரமேச்சுர மங்கலத்து ளகப்பட்ட வளையில்'' (S. I. I. i, 151:72) க. பளெ (b).

வளை—வளையம் = 1. வட்டம் (அக. நி.) 2. கைவளை (W.) 3. முடியிற் சூடும் வளையமாலை. 4. தாமரைச் சுருள். (பிங்.) 5. சுற்று. 6. ஒரு கோள் வான மண்டலத்தை ஒருமுறை சுற்றிவருங் காலம். 7 குளம். (W.)

வளையம்—வ. வலய.

வளை—வளையல் = 1. வளைவுள்ளது. (யாழ். அக.) 2. கை வளை. வளையல் விற்ற படலம்.

வளை—வளைவு = கோணல். 2. கட்டிடத்தில் அமைக்கும் வில்வடிவு. 3. வட்டம். 4. சுற்று. 5. வீட்டுப்புறம். (W.) 6 பணிவு. (யாழ். அக.)

வளைவி = 1. வீட்டிறப்பு. 2. வளையல்.

வளை—வனை. வனைதல் = 1. சக்கரத்தைச் சுற்றி மட்கல மமைத்தல். ''வனைகலத் திகிரியும்'' (சீவக. 1839). 2. சித்திர மெழுதுதல். ''வனையலாம் படித்தலா வடிவிற்று'' (சீவக. 709).

வள்—வண்—வண்ணம் = 1. வளைத்தெழுதுகை. 2. எழுதும் ஓவியம். 3. எழுதும் எழுத்து. 4. சித்திர மெழுதுங் கலவை. ''பலகை வண்ண நுண் டுகிலிகை'' (சீவக. 1107). 5. கலவை நிறம். 6. நிறம். ''வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்'' (குறள். 714). ''வண்ணம் வடிவே அளவே சுவையே'' (தொல். வேற். 17). 7. ஓவிய அழகு. 8. அழகு. ''பிறைநுதல் வண்ண மாகின்று'' (புறநா. 1). 9. இயற்கை யழகு. ''வண்ணமுந் தேசு மொளியுந் திகழ'' (பரிபா. 12:20). 10. செயற்கை யழகு, ஒப்பனை (அக. நி.) 11. சிறப்பு. ''கைவண்ண மிங்குக் கண்டேன்'' (கம்பரா. அகலிகை. 82). 12. நன்மை. (யாழ். அக.) 13. குணம். நிரலுடைமையும் வண்ணமுந் துணையும் (குறிஞ்சிப். 31). 14. வடிவு. (பிங்.). 15. குலம். (தொல். புறத். 27, உரை). 16. இனம். ''வண்ணம் வண்ணத்த மலர்'' (குறிஞ்சிப். 114). 17. வகை. ''தலைச் செல்லா வண்ணத்தால்'' (குறள். 561). 18. ஓசை வகை. ''வண்ணந் தானே நாலைந் தென்ப'' (தொல். செய். 210). 19. சிறந்த ஓசைவகைப் பாட்டு, வண்ணத்திரட்டு. 20. முடுகிய வோசையுள்ள கலியுறுப்பு. முடுகியல். (பிங்.). 21. இன்னிசைப் பண் (இராகம்). (சது.) 22. இன்னிசைப் பாட்டு. ''கோதை தானே யிட்டதோர் வண்ணந்தன்னை'' (சீவக. 1696.)

ஒ. நோ: தில்—திள்—திண்—திண்ணம்.

வண்ணம்—பிரா. வண்ண.

வண்ணம்—வண்ணன் = நிறத்தன்.

எ-டு: அழல் வண்ணன், கார் வண்ணன்.

ஒ. நோ: திண்ணம் – திண்ணன்.

வண் - வண்ணி. வண்ணித்தல் = ஓர் ஓவியத்தைப் பல்வேறு நிறங்களாலும் நுண்வினைகளாலுஞ் சிறப்பிப்பதும், ஓர் அணிகத்தை (வாகனத்தை)ப் பன்னிற அழகிய பொருட்களாற் சுவடிப்பதும், ஓர் உடம்பைப் பன்னிற ஆடையணிகளால் அழகுபடுத்துவதும், போன்று, இறைவனை அல்லது ஒரு தலைவனைப் பல்வேறு கருத்துக்களாலும் பல்வகைச் செய்யுளுறுப்புக்களாலும் சிறப்பித்துப் புகழ்தல்; அல்லது, பொருளிடங் காலங்களுள்

ஒன்றன் இயல் செயலுறுப்புக்களெல்லாவற்றையும் விளத்தமாக (விவரமாக) எடுத்துக் கூறுதல்.

ஒ. நோ : திண்ணம்—திண்ணி—திணி.

வண்ணி — வண்ணகம் = 1. வண்ணித்துப் புகழ்கை. ''வண்ணித்துப் புகழ்தலின் வண்ணக மெனப்படும்'' (தொல். செய். 140, உரை) 2. ஒரு கலிப்பா வுறுப்பு.

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா = தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னுங் கலியுறுப்பாறும் வந்து, முழு நிறைவாகும் கலிப்பா என்னும் பாவகை.

ஒருவன் தன் காதலை வெளிப்படுத்தற்கும், கடவுளை வழுத்தற்கும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா போல் மிகப் பொருத்தமான செய்யுள் வகையை வேறெம் மொழியிலுங் காண வியலாது.

ஒ. நோ : திண்ணம்—திண்ணகம்.

வண்ணி—வண்ணனை = வண்ணித்துப் புகழ்கை.

வண்ணக் கம்மர் = 1. வண்ணப் பூச்சு வினைஞர், வண்ண வோவியர். ''வத்தநாட்டு வண்ணக் கம்மரும்'' (பெருங். உஞ்சைக். 58 : 44).

வண்ணக்கன் = காசு நோட்டகன் (நாணய சோதகன்). வண்ணக்கன் சாத்தனார் (நற்). வடம வண்ணக்கன் தாமோதரனார் (புறநா. 172). பொற்காசை உரைத்துப் பார்த்து அதன் மாற்று வண்ணத்தால் (நிறத்தால்) காசின் இயல்பை யறியும் நோட்டக்காரன், வண்ணக்கன்.

வண்ணமாலை = நெடுங்கணக்கு (சங். அக.).

வண்ண மகள் = கோலஞ் செய்பவள்.

வண்ணத்தான் = வண்ணான், ஆடையழுக்ககற்றி வண்ணஞ் செய்பவன்.

வண்—வணர். வணர்தல் = 1. வளைதல். ''வணர்ந் தேந்து மருப்பின்'' (மலைபடு. 37). மயிர் குழன் றிருத்தல். ''வெறிகமழ் வணரைம்பால்'' (கலித். 57).

வணர் = 1. யாழ்க் கோட்டின் வளைந்த பகுதி. ''வணரளவு சாணும்'' (சிலப். பாயி 9). 2. கட்டிட வேலை வளைவு. (W.)

வணர் — வணரி = வளரித்தடி. இனி, வளரி—வணரி என்றுமாம்.

வண் — வண — வணங்கு. வணங்குதல் = 1. வளைதல் 2. நுடங்குதல். "வணங்கிடை" (பு. வெ. 7 : 27). 3. பணிந் தடங்குதல். "வணங்கிய வாயினர்" (குறள். 419). 4. ஏவற் றொழில் செய்தல். "நம்மில் வந்து வணங்கியும்" (கலித். 76).

(செ. குன்றுவினை) 1. வழிபடுதல். "எண்குணத்தான் றாளை வணங்காத் தலை" (குறள். 9). 2. சூழ்ந்து கொள்ளுதல். "வணங்குமிப் பிறப்பிவை நினையாது" (திருவாச. 41 : 6).

க. பக்கு (baggu)

வணங்கு — வணங்கி, பொழுது வணங்கி = கதிரவனை நோக்கி வளையும் பூ (சூரிய காந்தி).

வணங்கார் = பகைவர்.

வணங்கு — வணக்கு. வணக்குதல் = 1. வளைவித்தல். 2. பணியச் செய்தல். "மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" (அகநா. 61). தெ. வந்த்சுட்ட (vantsuta), க. பக்கிசு. (baggisu).

வணக்கு—வணக்கம் = 1. வளைகை. "வில்வணக்கந் தீங்கு குறித்தமையான்" (குறள். 827). 2. வழிபாடு. "குறைவிலா வென்னொடு வணக்கங் கூறி" (கம்பரா. தைல. 38). 3. நூன் முகத்திற் கூறுங் கடவுள் வணக்கம். "வாழ்த்தும் வணக்கமும் பொருளியல் புரைத்தலு மென மூவகைப்படும்" (சி. போ. பா. மங்க. பக். 1). 4. கண்ணியப் படுத்துகை. (யாழ். அக.)

வணக்கு—வணக்கி. யானை வணக்கி = யானைத் துறட்டி.

வணங்கு—வங்கு = 1. கப்பலின் விலாச் சட்டங்கள். 2. எலி முதலியவற்றின் வளை.

வங்கு — வங்கி = 1. நெளிவளையல். 2. நெளிவாள். 3. நெளி மோதிரம் (வங்கி நெளிவு).

தெ , க. வங்கி (nk), து. வக்கி (gg).

வங்கு—வங்கம் = 1. வளைவு. 2. ஆற்று வளைவு (யாழ். அக.). 3. வளைந்த அல்லது வட்ட வடிவான கப்பல். "வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்" (மதுரைக். 536).

வங்கு—வங்கியம் = வளைந்த ஊதிசைக் கருவி. "வங்கியம் பல தேன் விளம்பின" (கம்பரா. கைகேயி. 60). இயம் = இசைக் கருவி.

வங்கு — வங்கா = 1. வளைந்த ஊதுகொம்பு. (W.) 2. வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை. "வங்காக் கடந்த செங்காற் பேடை" (குறுந். 151), வளைந்த தாரை.

வங்கு—வாங்கு. வாங்குதல் (செ. குன்ருவி.)=1. வளைத்தல். "கொடுமரம் வாங்கி" (கல்லா. 4). 2. வளைத்து நாண் பூட்டுதல். "நாண் வாங்கலாதுவிற்கொண்டு" (இரகு. திக்குவி. 231). 3. வளைத்து இழுக்தல், இழுத்தல். "மத்தமொலிப்ப வாங்கி" (பெரும்பாண். 156). 4. மூச்சு இழுத்து உட்கொள்ளுதல். மூச்சு வாங்குகிருன். (உ. வ) 5 கொள்ளுதல், ஏற்றல். "வருகவென் றென்னை நின்பால்வாங்கிட வேண்டும்" (திருவாச. 5 : 68). 6. விலைக்குக் கொள்ளுதல். "மாதவி மாலை கோவலன் வாங்கி" (சிலப். 3. 171). 7. பெறுதல். "எங்கு வாங்கிக் கொடுத்தாரிதழியே" (தேவா. 456 : 8). 8. இழுத்து வரைதல். ககரத்துக்குக் கால் வாங்கினுற் காவாகும். (உ. வ.). 9. இழுத்து ஒதுக்குதல். இந்த வண்டி போகும்படி அந்த வண்டியை வாங்கிக்கொள். (உ. வ.). 10. வில் நாணிழுத்து அம்பைச் செலுத்துதல். "வாங்கினர் மதின்மேற் கணை" (தேவா. 21 : 2). 11. இழுத்து உய்வித்தல் "சமணர் பொய்யிற் புக்கழுந்தி வீழாமே போத வாங்கி" (தேவா. 658:7). 12. ஒதுக்கி நீக்குதல். "வாங்குமின் மனத்துயர்" (கம்பரா மீட்சிப், 278). 13. பிரித்தெடுத்தல். "தானே என்ரூர், புறத்திணை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின்" (தொல். புறத். 1, உரை). 14. பெயர்த்தல். "புற்றம் வாங்கிக் குரும்பி கெண்டும்" (அகநா. 72). 15. ஒடித்தல் வேழம்......கரும்பின் கழை வாங்கும்" (கலித். 40). 16. வெட்டுதல். கை கால்களை வாங்கி விடுவேன். (உ. வ.). 17. பிரம்பை வளைத்து அடித்தல். பிரம்பையெடுத்து அவனை நாலு வாங்கு வாங்கினுன். (உ. வ.). 18. அழித்தல். "விண்ணு மண்ணக முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" (திருவாச. 5 : 96).

(செ. குன்றிய வினை) 1. வளைதல். "வாங்குகதிர் வரகின்" (முல்லைப். 98). 2. வளைந்து அசைதல். "வளிவாங்கு சினைய மாமரம்" (பரிபா. 7 : 14). 3. குலைதல். பகைவர் தண்டு வாங்கிப் போயிற்று (W) 4. மெலிதல். உடம்பு வாங்கிப் போயிற்று. 5. உள்ளிழுத்தல் மழைத் தண்ணீரையெல்லாம் நிலம் வாங்கிக் கொண்டது. 6. குறைதல். வீக்கம் வாங்கியிருக்கிறது. 7. ஒதுங்குதல். 8. பின்வாங்குதல். "விரைவின்வாங்கி.... ......பிழைத்த சேனை பின்வர" (திருவாலவா. 49 : 20) 9. திறத்தல். அந்தக் கடையின் கதவு ஒருபுறம் வாங்கியிருந்தது

ம., தெ. வாங்கு.

வாங்கு=1. வளைவு. (நாமதீப. 768). 2. பிரம்படி, பிரம்பையெடுத்து அவனை நாலு வாங்கு வாங்கு. 3. சொல்லடி வசவு.

அவள் வாங்கின வாங்கு அவள் வாழ்நாளுக்குப் போதும். 4 வங்கி. க. பாகு (g)=வளைவு.

வாங்கு —இ. பாங்க். (வங்கி).

வாங்கு—வாங்கம்=வளைந்த கடல். வாங்கம்—வ. வாங்க (vānka).

வாங்கறுவாள்=வளைந்த அறுவாள்.

வாங்கு—வாங்கா=வளைந்த ஊதுகொம்பு அல்லது தாரை. வாங்கா—உ. பாங்கா. (nk)

வாங்கு—வாங்கல்=நெடுந் தொலைவு. காவேரிப்பாக்கத்திலிருந்து சுங்குவார் சத்திரம் ஒரு பெரு வாங்கல். வாங்கல்= இழுத்தல். இழுத்தல்=நீளுதல், நீளச்செய்தல்.

வாங்கு பிடித்தல்=பொருத்து விட்ட அல்லது பிளந்து போன இரு பகுதிகளை இழுத்துத் தகட்டால் இணைத்தல்.

வள்—வள்கு—வட்கு. வட்குதல்=வளைதல், வணங்குதல், தாழ்தல், "வாடிய காலத்தும் வட்குபவோ" (பழமொ. 204).

வட்கார்=வணங்கார், பகைவர். "வட்கார் திரையன்றழ லெழ வெய்து நின்றேன்" (திருக்கோ. 152).

வட்கு—வக்கு=1. மூத்திரக் குண்டிக்காய். 2. உருண்டையான விதைக் கொட்டை., ப்ரா. வக்க, வ. வ்ருக்க.

வக்கு—வக்கா=வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை வகை. "வக்காவு நாரையுங் கொக்கும் படுக்கவே" (குற்ரு. குற. 93 : 2).

ஒ. நோ: கொள் — கொள்கு — கொட்கு — கொக்கு= வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை.

வக்கா—வ. பக (baka)

வக்கு—வக்கரம்—வக்கரி. வக்கரித்தல் = கோணுதல், வளைதல், மடங்குதல், மடங்கித் திருப்புதல், ஆளத்தி செய்தல்.

வண்—வண்டு=1. கைவளை. "கை வண்டுங் கண்வண்டு மோடக் கலையோட" (ஆதி. உலா. 98). 2. சங்கு. (பிங்.). 3. பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றச் சிறுவிரல் நிமிர்ந்து, சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்து நிற்கும் இணையா வினைக்கை வகை. (சிலப். 3 : 18, உரை). 4. தேன் மலரைச் சுற்றி வட்டமிடும், வண்டு சுரும்பு தேன்

ஞிமிறு என்னும் நால்வகைப்பட்ட அறுகாற் சிறு பறவை. ''யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்ப'' (கலித். 131). ''வண்டுகாள் மகிழ் தேனினங்காள்'' (சீவக. 892). 5. தவசம் அளக்கும்போது கீழே விழுவதைப் பிடித்துக் கொள்ளும் வைக்கோற் புரிவளையம். 6. வழிப்போக்கில் மாடுகளின் உணவிற்காக வண்டிக் கூண்டைச் சுற்றித் தொங்கவிடும் வைக்கோற் பழுதை.

வண்டு கட்டுதல் = பானையின் வாயைச் சுற்றிச் சீலையால் மூடிக் கட்டுதல்.

வண்டு விடுதல் = வைக்கோலைப் புரியாகத் திரித்தல்.

வண்டு—வண்டன் = வட்ட நறுக்கம் (விருத்த சேதனம்) செய்யப்பட்டவன். (யாழ். அக.).

வண்டு—வண்டி = 1. சக்காம். 2. சகடம். வண்டியையேறினள். (சீவக. 2054, உரை). 3. ஒரு வண்டிப் பொறை (பாரம்).

ம. வண்டி, தெ., க. பண்டி.

சகடம் என்னும் பொருளில், வண்டி என்னுஞ்சொல் பண்டி என்பதன் திரிபாகத் தெரிகின்றது. ஏனெனின், பண்டி என்னும் வடிவே சீவக சிந்தாமணி மூலத்தில் இடம் பெற்றுள்ளது. மேலும், பாண்டி, பாண்டில் என்பவற்றை யொத்த வகர முதற் சொற்கள் இருவகை வழக்கிலுமில்லை. ஒருகால், வண்டி யென்னும் வடிவே தொன்று தொட்டு உலக வழக்கா யிருந்திருக்கலாம். வண்டி யென்னும் வடுக கன்னட வடிவம், வகர பகரத் திரிபின் விளைவாம்.

வண்டு—வந்து = வளைந்து வீசுங் காற்று. ''வந்தெனக் கந்தனூறு கணைதொடா'' (கந்தபு. சூர. வதை. 188).

(தொடரும்)

உயிரெழுத்து

''பன்னிருயிர் எழுத்துகளிலும் முதல் நின்ற அகர ஆகாரங்கள் இரண்டும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை உணர்த்தும் ஒலிகளாய் முதல்நிற்ப, எஞ்சிய பத்தில் இகர இனத்திற் சேர்ந்த இ ஈ எ ஏ ஐ என்னும் ஐந்தும் கீழ்நின்ற உயிர்களையும் உகர இனத்திற் சேர்ந்த உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தும் மேல்நின்ற உயிர்களையும் உணர்த்துதல் கண்டுகொள்க.''

—மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக். 56-57.

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(முன் கசசஆம் பக்கத் தொடர்ச்சி)

மகளிரின் நிறத்திற்கும் நீலமணியை ஒப்பிட்டுக் கூறுவது வழக்கமாயிருந்தது.

"மண்ணுறு திருமணி புரையு மேனி" —புறம், 56

"திருமணி புரையும் மேனி மடவோள்" —நற்றிணை, 8.

தமிழர் மிகவும் போற்றிய மணிகளில் நீலமணியும் ஒன்று என்பது தெரிகின்றது.

நீலமணியில் ஈழக நீலமணி என்ற பெயரும் தமிழில் வழங்கியுள்ளது. இந்திர நீலம் என்றும் ஒருவகை நீலமணியை அழைத்தனர். வான (இந்திரனுடைய) வில்லிலுள்ள நீல நிறத்தை உடைய மணி என்று பொருள் கூறுவர். திருவிளையாடற்புராணத்தில் நீலமணிகளில் இந்திர நீலமும், மாநீலமும் சிறந்த நீலக்கற்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. மாநீலம் முற்றிலும் கரியதென்று கூறப்பட்டிருப்பதால் கார்நீலம், காரகத்து நீலம் என்று குறிப்பிட்ட கல் இதுவே யாகலாம். கி.பி. முதல், இரண்டாம் நூற்றுண்டுகளில் நீலக்கல்லைக் கிரேக்க மொழியில் சபேரசு (Sappheeuros) என்றும், ஈபுரு மொழியில் சபீர் (Sappir) என்றும் அழைத்தனர். இந்தப் பெயர்கள் வடமொழிப் பெயரான 'சனிப்பிரியா' என்பதன் மாற்றமே என்று வடமொழியாளர் கூறினர். சனிக்கோளிற்கு உகந்த மணி என்பது அதன் பொருள். ஆனல், இந்தக் கருத்தை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சொல்லே மிகப் பிற்காலத்து வழங்கியது என்பர். ஈழநாட்டில் பெருமளவு கிடைத்த உயர்ந்த நீலமணிகள் அக்காலத்தில் தமிழ்நாட்டுத் துறைமுகங்களான முசிறி, தொண்டி வழியாகவே மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியானதாகப் பெரிப்புளுஸ் எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. தாலமி, காஸ்மோஸ் (Cosmos) ஆகிய ஆசிரியர்களும் அக்காலத்தில் ஈழத்திலேயே சிறந்த நீலமணி நிறையக் கிடைத்ததைக் குறிப்பிட்டுள்ளனர். கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, சயாம் ஆகிய நாடுகளில் கிடைத்த நீலமணிகளும் தமிழ்நாட்டு மேற்கத்திய துறைமுகங்கள் வழியாகவே கி.பி. முதல், இரண்டாம் நூற்றுண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதைக குறித்து கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். மணிகளின்

வணிகத்தில் தமிழ்நாட்டுத் துறைமுகங்கள் எந்த அளவு சிறந்தவையாக இருந்தன என்ருல் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் நேராக வந்த நீலக்கற்களைக்கூடத் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியானதாகக் கிரேக்கர்கள் மயங்கிக் கூறினராம். நீலக்கற்களை மேல்நாட்டார் நகைகளுக்குப் பயன் படுத்தினர். உரோம அரசர்கள் நீலமணியை மோதிரங்களில் அணிந்துவந்தனர்.

மணி என்ற பெயரைப் பெரும்பாலும் நீலமணியையே குறித்து வழங்கியிருப்பினும் சில சங்கப் பாடல்களில் மாணிக்கக் கல்லைக் குறித்து வழங்கினர். மாணிக்கம் தமிழ்நாட்டில் மிக அரிதாகவே கிடைத்ததாக மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். சேலம் பகுதியில் சிறிதளவு கிடைத்ததாக எழுதியுள்ளனர். ஆனுல், தமிழ்நாட்டிற்குப் பிற நாடுகளிலிருந்து மாணிக்கக் கற்கள் நிறைய இறக்குமதியானதாகக் கிரேக்க, உரோம ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதை மறக்கக்கூடாது. ஆதலின் மாணிக்கத்தைச் சங்க காலத்தில் தமிழர் நன்கு அறிந்திருப்பர்.

"ஐவனங் காவலர் பெய்தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்டன்" —புறம், 172

"ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதியுறழ் ஆரம் மார்பிற் புரள" —புறம், 362

இந்தப் புறநானூற்றுப் பாக்களில் வரும் மணி என்ற சொல்லுக்குப் புறநானூற்றுப் பழைய உரைகாரரும் உ. வே. சாமிநாதய்யரும் மாணிக்கம் என்றே பொருள் கூறியுள்ளனர். மாலையில் ஒளி கெட்டவிடத்து சங்கில் பொருத்தப்பட்ட மாணிக்கக் கல் இருளை நீக்கியதாகப் புறநானூறு கூறியுள்ளது. மாணிக்கக் கல்லின் உள்ளே அணையாத தீக்கதிர் ஒளிவிடுவதாக மணிநூல் வல்லுநர் கூறுவர். புறநானூறு மாணிக்கக்கல் இருளை நீக்கி ஒளியைத் தந்ததாகக் கூறியுள்ளது. ஞாயிறுபோன்று ஒளி தந்ததாகவும் புறநானூறு கூறியுள்ளது.

நல்ல பாம்பின் தலையில் மணி இருந்ததாகச் சில சங்கப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. இந்த மணியை மாணிக்கம் என்றே கூறுவர். நாகரத்தினம், நாகமணி, நாகமாணிக்கம் என்ற பெயர்கள் இக்காலத்தில் இந்த மணியைக் குறித்து வழங்குகின்றன.

"மேய்மணி யிழந்த பாம்பின் நீநனி" —அகம், 372

"நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர விர்க்கும்" —அகம், 72

"திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட்
கொழுமடற் புதப்பூ வூதுந் தும்பி
நன்னிற மருளு மருவிடர்" —அகம், 138

"உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை" —அகம், 92

"அருவி தந்த அரவுமிழ் திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக் குறுத்தலின்" —அகம், 192

"உயர்வரை அடுக்கத்து ஒளிறுபு மின்னிப்
பெயல்கால் மயங்கிய பொழுதுகழி பானாள்
திருமணி அரவுத் தேர்ந்து உழல" —நற்றிணை, 255

மிகவும் முதிய நாகப்பாம்பின் தலையில் மாணிக்கக் கல் தோன்றுவதாகவும், இரவில் அந்தக் கல்லின் ஒளியில் இரை தேடுவதாகவும் ஒரு நம்பிக்கை இந்தியாவில் பல இடங்களிலும் நிலவிவந்தது. கதைகளிலும் புராணங்களிலும் வழங்கியது. மாணிக்கக்கல்லை நாகப்பாம்பு கீழேவைத்து அதன் ஒளியில் இரை தேடுமாம். இந்தக் கல்லின்மேல் மாட்டின் சாணியையோ மண்ணையோ போட்டு மூடிவிட்டால் ஒளிமறைந்துவிடும். இவ்வாறு செய்து மாணிக்கக்கல்லை மக்கள் எடுத்துக்கொள்வர் என்று கதைகள் கூறுகின்றன. சங்கநூல்களிலும் இரவில் மேய்வதற்காக மாணிக்கத்தை நாகப்பாம்பு பயன்படுத்தியதாகக் கருதினதால் 'மேய்மணி' என்றழைத்தனர். நாகம் மணியை உமிழ்வதாகவும் கூறப்பட்டுள்ளது நாகம் தனது மாணிக்கத்தைத் தேடி அலைந்ததாக நற்றிணை 255ஆம் பாடல் கூறியுள்ளது. நாகம் உமிழ்ந்த மாணிக்கத்தை அருவி அடித்து வந்ததாகவும் அது மலையிலிருந்த சிறுகுடியினரின் தெருவில் விளக்காக உதவியதாகவும் அகநானூறு கூறியுள்ளது. பாம்பின் தலையிலிருந்த மாணிக்கக் கல்லைப்பற்றிச் சங்ககாலத்திலேயே செய்திகள் பரவியிருந்தன. அகநானூறு 138ஆம் பாடலில் நாகம் உமிழ்ந்த திருமணி தும்பியின் நன்னிறத்தை ஒத்திருப்பதாகக் கூறியதிலிருந்து நீலமணியென்றும் கொண்டனரென்று கருதலாம். திருவிளையாடற் புராணமும் பாம்பின் பெரியமுத்து நீலரத்தின நிறமுடையதாம் என்று கூறியுள்ளது. ஆனால், நாகமணியை மாணிக்கமென்றே கருதினர். நாகத்தின் தலையில் மாணிக்கக்கல் இருந்ததாகக் கூறியது ஒரு கற்பனைச் செய்தியேயாகும். இது வடநாட்டிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. நாக இனத்தாரிடையே வழங்கிய செய்தி பிற்காலத்தில் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பரவியிருக்கலாம்.

"திருமணி" என்று சில பாடல்களில் மாணிக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

"நெருந லெல்லை யேனற் றோன்றித்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்ற முறழ்கொள" —அகம், 32

"பல்கதிர் வாங்கிய படுசுட ரமையத்துப்
பெருமரங் கொன்ற கால்புகு வியன்புனத்
தெரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை" —அகம், 213

"முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப"
—திருமுருகு, 84—85

"புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் தின்னாண்"
—முல்லைப்பாட்டு, 62—63

"வாழையஞ் சிலம்பின் கேழல் கெண்டிய
நிலவரை நிவந்த பலவுறு திருமணி
ஒளிதிகழ் விளக்கத்து ஈன்ற மடப்பிடி" —நற்றிணை, 399

மேலே காட்டிய பாடல்களில் திருமணி என்று வருமிடங்களில் மாணிக்கம் என்று சில உரையாசிரியர்கள் பொருள் கூறியிருப்பது பொருத்தமாகவே உள்ளது. மாணிக்கத்தை அரசர்கள் விரும்பி முடியிலும் அணிகளிலும் அணிந்து வந்தனரென்று தெரிகின்றது. ஒளிவிடும் மாணிக்கத்தை அணிகலனில் அணிந்த தலைவன் அரசன்போலத் தோற்றமளித்தான் என்று அகநானூறு (32) கூறுவது கவனிக்கத்தக்கது. முடியில் திருமணியான மாணிக்கம் மின்னியதாகத் திருமுருகாற்றுப்படை கூறியிருக்கின்றது. மாணிக்கம் நன்கு ஒளிவிடும் என்ற கருத்து இருந்ததால் மாணிக்கம் விளக்குப்போலத் திகழ்ந்ததாக முல்லைப்பாட்டும் நற்றிணையும் கூறியுள்ளதைக் காணலாம். அழல் அவிர் மணி என்று ஐங்குறுநூறும் (232) "எரிமருள் கதிர் திருமணி" என்று அகநானூறும் (213) கூறுவதிலிருந்து தீக்கதிர்போன்ற ஒளியுடையதாக மாணிக்கத்தைச் சங்க காலத்திலும் கருதினர் என்று தெரிகின்றது. மாணிக்கக்கல்லே ஒளி விளக்கம்போல இருந்ததாகச் சங்க நூல்களில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கொல்லிமலையில் மாணிக்கம் கிடைத்ததாக அகநானூறு கூறியிருப்பது அரிய செய்தியாகும். மேல்நாட்டு ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் அரிதாகச் சேலம் பகுதியில் மாணிக்கம் கிடைப்பதாகக் கூறியிருப்பதோடு இச் செய்தி ஒத்

துள்ளது. மாணிக்கத்தைப் பிற்காலத்திலும் அரசர்கள் விரும்பி அணிந்தனர். சிறந்த மாணிக்கத்தை அணியும் அரசன் பகை வரை வெல்வான், உலகையே அரசாள்வான் என்ற எண்ணம் பிற்காலத்தில் நிலவி வந்துள்ளது. அரசருக்குகந்த மாணிக்கக் கற்களை இறைவனுக்கும் மிகவும் சிறந்ததாகக் கருதி உயர்ந்த மாணிக்கக் கற்களை இராசேந்திர சோழன் போன்ற பேரரசர்கள் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுககு அளித்த செய்தி கல் வெட்டுகளிலிருந்து விளங்குகின்றது.

மாணிக்கக்கல் ஈழநாட்டிலும் சயாம் நாட்டிலும் இருந்து அக்காலத்திலேயே தமிழ்நாட்டிற்கு வந்ததற்குச் சான்றுகள் உண்டு. அக்கற்கள் தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலே இருந்து தான் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை மேல்நாட்டு ஆசிரியர் எழுதிய செய்திகளிலிருந்து உணரலாம். ஆதலின் மாணிக்கத்தைப்பற்றிச் சங்ககாலத்திலேயே செய்திகள் இருந் ததில் வியப்பில்லை. ஆனால், சங்ககாலத்தில் மாணிக்கம் என்ற பெயர் வழங்கவில்லை. பொதுவாக மாணிக்கததையும் மணி என்றே குறிப்பிட்டனர். ஆனால், மிக முதன்மையாக உணர வேண்டிய ஒரு செய்தி உரோம ஆசிரியர்களின் குறிப்பிலிருந்து தெளிவாகின்றது. உரோமர் நீலமணியையும் மாணிக்கத்தையும் (Sapphire and Ruby) என்று கூறினர். அக்காலத்தில் கொரண் டம் (Corundam) என்ற உறுதியான கல்லாகவே இதனைக் கூறினர் என்பது தெரிகின்றது. இந்த Corundam என்ற பெயர் தமிழ்ச்சொல்லான குருந்தம் என்ற பெயரிலிருந்து வந்தது என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட கருத்தாகும். ஆதலின் மாணிக்கம் என்ற பெயர் சங்ககாலத்தில் வழங்கவில்லை யாயினும் குருந்தம் என்ற பெயர் சங்ககாலத்திலேயே மாணிக் கத்திறகுத் தமிழில் வழங்கியிருக்கலாம் என்று கருத இடமுண்டு. நவமணிகள் என்ற நூலின் ஆசிரியர் வைத்தியநாதன் அவர் களும் மாணிக்கக்கல்லை ஆதியில் 'குருவிந்தி' என்று அழைத் தார்கள், அச் சொல்லே கொரண்டு என்று மாறி நவரத்தின பரீட்சகர்களால் கோரண்டம் என்று வழங்கப்படுகின்றது என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். குருந்தம் என்ற பெயர் சங்க நூல்களில் வழங்கியுள்ளது. ஆனால், அஃது ஒரு மரத்தின் பெயராகவே வழங்கியுள்ளது ஒரு விலையுயர்ந்த கல்லின் பெய ராக வழங்கிய இடம் சங்க நூல்களில் காணப்படவில்லை. ஆயி னும் குருநதம் என்ற பெயர் சங்ககாலத்திலேயே ஒரு மரத் திற்கும் ஒரு விலையுயர்ந்த மணிக்கல்லிற்கும் வழங்கியிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. ஏனென்றால் சங்க காலத்திலேயே கிரேக்க, உரோம ஆசிரியர்கள் மணிகளின்

தமிழ்ப் பெயர்களைத் தெரிந்திருந்தனர். பூக்களின் நிறத்தால் மணிக்கற்களை ஒப்புமைப்படுத்திக் கூறும் பிற்கால மரபிலிருந்தும் குருந்தம் என்ற பெயர் ஒரு மரத்தையும் விலையுயர்ந்த ஒரு வகைக் கல்லையும் குறித்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. இந்தக் குருந்தக்கல்லையே பிற்காலத்தில் மாணிக்கத்தின் ஒரு சாதியாகக்கொண்டு குருவிந்தம் என்று அழைத்தனரென்று தெரிகின்றது.

> "திலகம் உலோத்திரம் செம்பருத் திப்பூக்
> கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே
> சிந்துரம் குக்கிற் கண்ணென எட்டும்
> எண்ணிய குருவிந்தம் மன்னிய நிறமே'' —ஊர்காண். 183-7

என்ற மேற்கோள் பாடலை அடியார்க்குநல்லார் காட்டியுள்ளார். இந்தப் பாடலில் கூறியுள்ள மலர்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் நிறமெல்லாம் சிவப்பாகவே இருப்பதைக் காண லாம். குருந்தம் என்ற மரத்தின் (Atlanta Monphylla) மலர் மஞ்சள் நிறமானது. மாணிக்கத்தின் நிறம் முதன்மையாகச் சிவப்பேயாகும். ஆதலின் இதைச் செம்மணி என்றும் பிற் காலத்தில் அழைத்தனர். ஆனால், குருந்தம் என்ற மரத்தின் பூவின் நிறம் மஞ்சளாகும் ஆதலின் சிவந்த மணியை எப்படிக் குருந்தம் என்று அழைக்கலாம் என்ற கேள்வி எழலாம். மணி களின் உண்மைத் தன்மையை உணர்ந்தோர் அத்தகைய ஐயத்தை எழுப்பமாட்டார். மாணிக்கத்தில் நீல நிறமும் உண்டு, சிவப்பு நிறமும் உண்டு, மஞ்சள் நிறமும் உண்டு. வடமொழி நூலில் காலாபுரத்தில் உண்டாகும் மஞ்சள் வண்ண முள்ள மாணிக்கத்திற்குக் 'குருவிந்தம்' என்ற பெயர் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அக்காலத்தில் கிடைத்த மாணிக்கக்கற்கள் மஞ்சளாக இருந்ததால் குருந்த மலரை அக் கற்களுக்கு ஒப்பிட்டுப் பெயரிட்டிருக்கலாம். ஆனால், பிற்காலத்தில் இந்த நிறக் கற்கள் மாணிக்கத்தில் ஒரு தாழ்ந்த வகையே என்று கருதினர் ஈழநாட்டில் கிடைத்தவையே சிவந்த நிறத்திலும் பெரிய உருவிலும் விளங்கின என்பதை அறிய வேண்டும். சிலப்பதிகாரத்தில் மாணிக்கத்தைப் பதுமம்' நீலம், விந்தம், படிதம் என்று தகுதி பிரித்துக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். மாணிக்கத்தின் சிறப்பான நிறம் சிவப்பு ஆனாலும் மாணிக்கக்கல் மஞ்சள், நீலம், இளஞ்சிவப்பு, கருஞ் சிவப்பு போன்ற பல மாற்று நிறங்களில் கிடைத்தன என்பதை உணரவேண்டும். பிற்கால நூல்களில் மாணிக்கத்தைப் பதும ராகம். சௌகந்திகம், குருவிந்தம், கோவாங்கம் என்று வகைப் படுத்தினர். ஆனால் சங்ககாலத்தில் குருந்தம் என்ற பெயரே

மாணிக்கத்திற்கு வழங்கியிருக்க வேண்டும் என்பதைப் பிற செய்திகளிலிருந்து உய்த்து அறியலாம். இந்தப் பெயரே பிற் காலத்தில் குருவிந்தம் என்று மாற்றி அழைக்கப்பட்டது. வட மொழிக்கும் சென்றது. சங்ககாலத்திலேயே கிரேக்கமொழி யிலும் சென்றது. மாணிக்கம் ஈழநாட்டில் நிறையக் கிடைத்த தால் இந்தக் கற்களைச் சங்ககாலத்திலேயே தமிழர் நன்கு அறிந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

மாணிக்கத்தின் பதினாறு குற்றங்களைக் கல்லாடம் விரிவாக விளக்கியுள்ளது. ஒரு வடமொழி நூலில் மாணிக்கத்தின் குற் றங்கள் எட்டு கூறப்பட்டுள்ளன. அவற்றில் லசுநாபதம் என்ப தொன்றெனக் காணப்படுகின்றது. கல்லில் பால் படிந்தது போலக் காணப்படும் குற்றமே இப்பெயரால் அழைக்கப்பட்டது. சோழர்காலக் கல்வெட்டிலும் லசுனி (லஸுநி) என்பது மாணிக் கத்தின் குற்றத்துள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. லசுநாபதமும் லசுனியும் ஒன்றே யென்று தோன்றுகின்றது. அரேபியர்கள் "லா சுனியா" (Lah Suniya) என்ற பெயரில் ஒருவகை மணி யையே குறிப்பிட்டுள்ளனர். இதை 'வாட்' என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். (A stone collected at various localities on the Malabar coast is generally accepted as a form of cat's eye. They are sent for Cambay to Bombay, thence to Persia and Arabia and are best known under the name Chush. Maidar or Lah Suniya, the name given to peculiar green coloured cat's eye.) இராசேந்திர சோழர் கல்வெட்டில் லசுனி என்பது மாணிக்கத்தின் குற்றமாகக் கூறப்பட்டிருப்பினும் கல் வெட்டின் கருத்தைப் பார்க்கும்போது குற்றங்களும் குணங் களும் சேர்ந்த விலையுயர்ந்த கற்களைப் பயன்படுத்தினர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆதலின் 'லா சுனியா' என்ற குற்றத்தையுடைய மாணிக்கக்கல்லை அரேபியர் குணமாகக் கொண்டு போற்றினர் என்று கருதவேண்டும். இதன் காரண மாகவே நவமணிகளைப்பற்றி எழுதின நவரத்தினக் கல் வல்லு நரான ஆசிரியர் வைத்தியநாதன் 'லசுனி' என்பது குணத்துள் ஒன்றாகச் சொல்லப்பெறுகின்றது என்று கூறி, அதற்குத் தென் னிந்திய சாசனங்களைச் சான்றாகக் கூறியுள்ளார். ஆனால் தென்னிந்திய சாசனமோ 'லசுனி' என்பதைக் குற்றமாகக் கொண்டதன்றிக் குணமாகக் கொள்ளவில்லை. வைத்தியநாதன் அவர்கள் குணமாகக் கொண்டதற்குக் காரணம் அரேபிய ஆசிரியர்கள் கூறிய செய்தியைப் பின்பற்றியதாகலாம். கல் வெட்டுகளில் இறைவனுக்கோ இறைவிக்கோ வேறு கடவு ளர்க்கோ அளிக்கப்பட்ட கற்களில தெளிவாக விலையுயர்ந்த

கற்களின் எடையும் குற்றமும் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். குற்றம் உள்ளிட்ட கற்களேயே கூறியிருக்கிருர்கள். குற்றமே இல்லாத மணிக்கற்கள் இயற்கையில் கிடைப்பதரிது. ஆனுல் அரேபியர்கள் லசுனி என்ருெரு மணிக்கல்லேக் கூறியிருப்பதுபோலவே, பிளினி முதலிய உரோம ஆசிரியர்களும் கி.பி. இரண்டாம் நூற்ருண்டுக்கு முன்னரே 'லேக்னிஸ்' (Lychnis) என்ருெரு கல்லேக் குறிப்பிட்டுள்ளதை எந்த அறிஞரும் கவனிக்கவில்லே. ஆகவே இராசேந்திர சோழன் கல்வெட்டில் கூறப்பட்ட லசுனி என்ற பெயரே அரேபியர்களால் கி.பி. 8ஆம் நூற்ருண்டிற்குப் பின் லசுனியா (Lah Suniya) என்றும் பிளினி என்பவரால் கி.பி. 2ஆம் நூற்ருண்டிற்கு முன் 'லேக்னிஸ்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணும்போது வியப்படையாமல் இருக்கமுடியாது.

ஆதலின் 'லசுனி' என்ற சொல் சங்ககாலத்திலேயே தமிழ் நாட்டில் வேருெர் உருவத்தில் வழங்கியிருக்க வேண்டும். இந்தச் சொல்லேப் பிளினி கி.பி. 2ஆம் நூற்ருண்டிற்கு முன்னர் 'லேக்னிஸ்' என்று இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். ஆனுல் 'லேக்னிஸ்' என்ற பெயர் எந்தக் கல்லேக் குறித்தது என்பதில் குழப்பம் உள்ளது. சிலர் மாணிக்கம் என்றும் சிலர் garnet என்ற ஒருவகைக் கல் என்றும் கூறுவர். ஆனுல் பொதுவாக இதை ஒருவகை மாணிக்கம் என்றே கொண்டுள்ளனர். இதைப்பற்றிப் பெரிப்புளுஸ் நூலிற்கு விளக்கம் எழுதிய சாஃபு (Shoff) என்ற ஆசிரியர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. [Generally we cannot tell when the words "Lychnis" and "anthrax" (Latin Carbunculus) mean garnet and when they mean Ruby, but the fine red Ruby which was used by the Romans unengraved as collections show in rings and jewellery and one of the "anthraces" of the Theophrastos, the "Lychnitis" of Solinas and the best "Lychnis" of Pliny found in Indian regions and attributed by one writer to the Hydaspes are probably the ruby, which now comes above all from Upper Burma, Siam, the gem-gravels of Ceylon, much more rarely from Mysore and Salem, the Cauvery and other rivers............'The Periplus of the Erythraen Sea'—Wilfred H. Shoff.]

இந்த ஆசிரியர் கூறிய விளக்கத்திலிருந்து 'லேக்னிஸ்' (லசுனி) என்ற பெயருடைய மாணிக்கம் இந்தியாவில் கிடைத்ததென்பதும் அதுவும் அரிதாக மைசூர், சேலம், காவிரிப் பள்ளத்தாக்கில் கிடைத்ததென்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

ஆதலின் லசுனி என்ற சொல் சங்க காலத்தில் வேற்று உருவத்தில் ஒருவகை மாணிக்கத்தைக் குறித்து வந்ததென்று கருதலாம். இந்தச் சொல்லே கிரேக்கர்களாலும் உரோமர்களாலும் லைக்னிஸ், லைக்னிடிஸ் என்று சங்க காலத்தில் வழங்கிற்று. பிற்காலத்தில் வடமொழியில் லசுநபாதம் என்று இதுவே மாணிக்கத்தின் குற்றமாகக் கூறப்பட்டது. இராசேந்திர சோழன் கல்வெட்டிலும் லசுனி என்பது மாணிக்கத்தின் குற்றங்களில் ஒன்ருகக் கூறப்பட்டுள்ளது. கல்லாடத்தில் கூறப்பட்டுள்ள மாணிக்கத்தின் குற்றங்களில் லசுனி என்ற பெயர் காணப்படவில்லை. ஆனுல், 'இலேச்சுமி' என்ற பெயர் (லசுனியின் இடத்தில்) கூறப்பட்டுள்ளது தெரிகின்றது.

"கருகிநோய் தாதல் காற்று வெகுளி
திருகல் முரணே செம்மண் இறுகல்
மத்தகக் குழிவு தராசம் இலேச்சுமி
எச்சம் பொரிவு புகைதல் புடாயம்
சந்நைநெய்ப் பிலீஎனத் தகுபதி ருறும்
முந்திய நூலின் மொழிந்தன குற்றமும்"

—கல்லாடம் 98 : 21—26.

கல்லாடத்தில் கூறிய 'இலேச்சுமி' என்ற குற்றமே 'லசுனி' என்று இராசேந்திர சோழன் கல்வெட்டில் கூறப்பட்டிருக்க வேண்டும். கல்லாடம் இந்தக் கல்வெட்டுக்கு முந்திய நூலாதலால் 'இலேச்சுமி' என்ற பெயரே 'லசுனி' என்று மாறியதாகக் கருதலாம். சங்ககாலப் பெயரும் இப் பெயரை ஒட்டியதாக இருந்திருக்கலாம். கிரேக்க, உரோம ஆசிரியர்கள் கூறிய செய்திகளிலிருந்து சங்க காலத்திலேயே ஒருவகை மாணிக்கத்தைக் குருந்தம் என்று தமிழில் அழைத்தனரென்பது தெரிகின்றது. மற்ருெரு வகை மாணிக்கத்தை லக்னிஸ், லசுனி என்ற பெயர்களை ஒட்டிய ஒரு பெயரால் அழைத்திருக்கலாம். மாணிக்கத்தைப் பிற்காலத்தில் செம்மணி என்று கூறுவது வழக்கமாகும். சிவப்பு என்ருலே மாணிக்கத்தைக் குறிக்கும்.

(தொடரும்.)

நவமணியின் தோற்றம்

"அத்தகை ஆவின் சோரி மாணிக்க மாம்பல் முத்தம்
பித்தவை டுய மென்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங்கோ மேதம் தசைதுகிர் நெடுங்கண் நீலம்
எய்த்தவை புருட ராகம் இவைநவ மணியின் தோற்றம்"

—திருவிளை. மா. வி. படலம், 35.

கன்னடத்தில் கன்னித் தமிழ்

[இரா. மதிவாணன்]

திருக்குறளில்—மக்கள் :

பொதுமக்களைச் சுட்டவேண்டிய இடத்தில் திருவள்ளுவர் 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு' 'மக்களே போல்வர் கயவர்' என இரு சொற்களையும் ஆள்கிறார். குழந்தைகளைக் குறிக்கும் இடத்தில்,

''குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

என 'மக்கள்' எனும் சொல்லையே ஆள்கிறார். தமிழுக்கும் பழங் கன்னடத்துக்கும் இருக்கும் நெருங்கிய உறவைக் காட்டக் கன்னட இலக்கிய ஆசிரியர்கள்[1] இக் குறளைக் கீழ்க் கண்ட வாறு கன்னட வடிவாக்கி மகிழ்கின்றனர்.

''கொழலினிது வீணெ யினிதம்ப தம்மக்கள
கொதலெச்சொல் கேள தவர்.''

யாழ், மழலை எனும் இருசொற்கள் கன்னடத்தில் இல்லாததால் வீணெ, குதலை எனும் சொற்களைச் சேர்த்திருக்கின்றனர். இதைக் கண்ணுறும்போது திருக்குறளைக் கன்னடத்தில் மொழி பெயர்ப்பதைவிடக் கன்னட எழுத்தில் எழுதிக் காட்டிப் பொருள் விளக்கினால் கன்னட மககள் எளிதில் விளங்கிக் கொள்வர் என்பது தெளிவாகிறது. அப்படி ஒரு திருக்குறள் பதிப்பு வெளி வருவது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழில் 'கள்' (மது) விலக்கு :

கன்னடமும் தெலுங்கும் பலர்பாலில் 'அர்' ஈறு ஒன்றையே உகரம் சேர்த்து வழங்கும் நிலையில் தமிழில் மட்டும் வந்தார்கள், சென்றீர்கள் என இரட்டைப் பன்மை தேவையா? வேண்டாது வழக்கூன்றிய 'கள்' ஈற்றை நீக்க இயலுமா என ஆய்தல் அறிஞர் கடன். திரவிட மொழிகளின் பொது இயல்பிலிருந்து, 'கள்' ஈற்று ஆட்சி தமிழை உயர்திணை வழக்கில் வேறுபடுத்திக் காட்டுவது இயற்கை வேறுபாடாகத் தெரியவில்லை.

தமிழ்ப் பெருமக்களும் தமிழார்வலரும் குறிப்பாக எழுத் தாளர், பேச்சாளர், ஆசிரியர் ஆகியவர் உயர்திணையில் 'கள்'

---

1. *கன்னட சாகித்ய சரித்ரெ* (பக். 188).

ஈறு சேர்க்காமல் எழுதவும் பேசவும் தொடங்கிவிட்டால் தமிழ் நாட்டில் 'கள்' (மது) விலக்கப்பட்டது போலவே தமிழ்மொழியிலும் 'கள்' ஈறு விரைவில் விலகி விடும்.

தமிழில் 'கள்' ஈறு சேர்ந்ததால் தமிழ் வினைமுற்றுகளின் ஒலிப்பில் எளிமை குறைந்தது. வந்தார்கள் என்பதை வந்தாங்க வந்தாக எனப் பேச வேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டுப் பேச்சுத் தமிழுக்கும் இலக்கியத் தமிழுக்கும் இடைவெளி மிகுக்க அடிகோலி விட்டது. மொழியின் இலக்கணக் கட்டைக் கடந்து இரட்டைப் பன்மை ஈறுகள் சேர்ந்ததால் மொழியமைதி குலைவதற்கு இது சான்றாகிவிட்டது. அவர்கள்—அவுக, அவிய, அவங்க எனத் திரிந்த கொச்சைத் தமிழ் வழக்குகளை நோக்குக.

உயர்வு தாழ்வு மனப் பான்மையால் தோன்றிய 'கள்' ஈறு நிகர்வு (சமத்துவ)க் காலத்தில் மாற வேண்டாவா?

பலவின் பாலீறுகள்—(அவை, அவ்)

"அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே" (தொல். சொல் 169)

இந் நூற்பாவின்படி, அது, அஃது என்பவை ஒன்றன்பாலும் அவை, அவ் என்பவை பலவின்பாலும் காட்டுவன.[2]

அது வந்தது.

அஃது உளது.

என மெய்முதல் வருமொழி முன் 'அது'வும் உயிர்முதல் வருமொழி முன் 'அஃது'வும் வழங்கற்பாலன என்பர். இவ்வாறே மெய்முதல் வருமொழி முன் 'அவை' அல்லது அவ்வே என்பதும், உயிர்முதல் வருமொழிமுன் 'அவ்'வும் வழங்கற்பாலனவாய் இருந்திருத்தல் கூடும் என்பதற்குத் தமிழ் வழக்காறுகள் சான்றாகின்றன. 'அவ்யாழ்', 'அவ்வூர்',

"அவ்வே,
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப"
(தொல். சொல். 121)

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை"
(தொல். எழுத். 7)

2. தொல். 423.

"அவ்வே........................" (நற். 23 : 9)

"இவ்வே, பீலியணிந்து..........." (புறம். 95)

அஃது என்பதை ஆய்தப் பெயர் எனக் கூறுவது போன்றே அவை முதலாகிய வகரப் பெயர் எனத் தொல்காப்பியர் சுட்டுவது, வகர மெய்யை இடையில் கொண்ட 'அவ்வே' எனும் சொல்லே யாதல் வேண்டும்.

அவ்வே, இவ்வே எனும் சொல்லாட்சிகள் கன்னடத்தில் அவு, இவு என்றும் தெலுங்கில் அவி, இவி என்றும் மலையாளத்தில் அவ, இவ என்றும் திரிந்து வழங்குகின்றன.

கன்னடத்தில் உள்ள அவு எனும் பலவின்பாற் சுட்டுப் பெயர் அவை எனும் தமிழ்ச் சொல்லின் திரிபன்று. தமிழிலுள்ள ஐகாரவீறுகள் தலை—தலெ, நிலை—நெலெ எனக் கன்னடத்தில் திரிவது போன்று அவை—அவெ எனத் திரியாமை காண்க. இதிலிருந்தும் அவ்வே என்னும் சொல்லே அவு எனத் திரிந்துள்ளது எனத் தெற்றென விளங்குகின்றது.

திரவிட மொழிகள் தம்முள் பிரிவதற்கு முன்பு அவை, அவ் (அவ்வே) எனும் இரண்டு பலவின்பாற் சுட்டுப் பெயர்களும் வழங்கிய காலத்தில் தொல்காப்பியர் வாழ்ந்திருக்கிறார் என்பதும், பிற்காலத்தில் அவை தமிழுலக வழக்காகவும், 'அவ்' அவு, அவி எனத் திரிந்து ஏனைத் திரவிட வழக்காகவும் மருவியுள்ளது எனத் தெரிகிறது.

இதன் சாயலாகவே தமிழில் வழங்கிய வகரவீற்றுப் பலவின்பால் வினைமுற்றையும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

"அஆவ என வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை'
(தொல். சொல். 218)

உண்குவ, தின்குவ எனும் சொல்லாட்சிகளை உரையாசிரியர் பலவின்பால் சுட்டிய வகரவீருகக் காட்டினும் அவை தமிழில் வழக்கூன்ருமல் அகரவீறே நிலைத்துவிட்டது.

ஆயின், கன்னடத்தில் வகரவீறே பலவின் பாலீருக இருப்பது பழந்தமிழிலக்கணக் கூறுகளைக் கன்னடம் இன்னும் கட்டிக் காத்து வருகிறது என்பதற்குச் சான்ருகிறது.

அவு சேரிதவு—அவை சேர்ந்தன.

இவு கிறியவு—இவை சிறியவை.

உவு இனியவு—உவை இனியவை.

அவுவு மனகேறுவுவு—அவை மனத்தில் ஏறுவன.

அஃறிணை யொருமை :

ஆ வந்தது, ஆ வந்தன என வினையே எண் காட்டி நிற்ற லின் அஃறிணைப் பெயர்க்கு ஒருமை, பன்மையீறுகள் வேண்டிய தில்லை. இதனைச் சாதியொருமை (சாதியேக வசன) என்பர். இது கன்னடத்திலும் இவ்வாறே வழங்குகிறது.

காடினல்லி ஆனெ இருத்தவெ—காட்டில் யானை இருக் கின்றன.

"தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே"

(தொல். சொல். 173)

இடச்சுட்டு :

"சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுத லாகிய இகர இறுதியும்
....
வல்லெழுத்து மிகுநவும் உறழாகு நவும்
சொல்லிய மருங்கின் உளவென மொழிப"

(தொல். எழுத். 160)

இந்நூற்பாவுக்கு உரையாசிரியர் இளம்பூரணர்,

அதோளிக் கொண்டான், இதோளிக் கொண்டான் எனும் தொடர்களைச் சான்றாகக் காட்டுகிறார். தமிழில் அங்கு, இங்கு என உகரஇறுதி சுட்டுச்சொற்களே உள்ளன.

தொல்காப்பியர் சுட்டும் இகர இறுதி இடச்சுட்டுகள் கன்னடத்தில் பெருவழக்காய் நிலைத்துள்ளன.

அதோளி—அல்லி (அங்கே).

இதோளி—இல்லி (இங்கே).

எதோளி—எல்லி (எங்கே).

அல்லி நோடிதனு—அங்கே நோக்கினான்.

எல்லி நின்தனு—எங்கே நின்றான்.

நெடுஞ்சுட்டு :

ஆ—ஆங்கு, ஈ—ஈங்கு, ஈது என நெடுஞ்சுட்டுகளே தமிழில் முதலிற் றோன்றின எனவும் நாளடைவில் அது, அங்கு எனக் குறுகின எனவும் கூறுவர் அறிஞர். இக் கூற்றின்

படியும் நெடுஞ்சுட்டு தமிழில் வழக்கு வீழ்ந்தாலும் கன்னடத்திலும் தெலுங்கிலும் வழக்கு வீழாமலிருப்பது அறிதற்பாற்று.

க. ஆ மொகு—அந்த மகவு.
ஈ ஊவு—இந்தப் பூ.

தெ ஆ இல்லு—இந்த இல்லம்.
ஈ குவ்வ—இந்தக் குருவி.

வினுச் சொற்கள்:

யா, யாவது, யாவன், யாவள், யாவர், யாங்கு, யாங்ஙனம் எனும் வினுச் சொற்கள் அவ்வாறே கன்னடத்தில் வழங்குகின்றன. யா வினுச்சொல் அல்லவா? என்ன? என்னும் பொருள்களில் கன்னடத்திலும் தமிழிலும் ஆட்சி பெற்றுள்ளன.

(ஒ. நோ.)

"யா பன்னிருவர் மாணுக்கர் அகத்தியனுர்க்கு
பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'

தமிழில் என்ன, ஏன் என்னும் இருபொருள்களிலும் எவன் எனும் சொல்லாட்சி உள்ளது.

"வானுயர் தோற்றம் எவன் செய்யும்" (குறள். 272)
"அருளா துவதை எவனே" (ஞா. 46 6)

இவ் வினுச் சொல் கன்னடத்தில் ஏனு (எவன்-என்-ஏனு) என வழங்குகிறது. எதற்கு எனும் தமிழ்ச் சொல்லின் திரிபான ஏகெ (ēke) கன்னடத்தில் ஏன் என்னும் பொருளில் வழங்குகிறது.

கேசிராசனுர் சப்தமணி தருப்பணத்தில் ஆவுது—ஏது எனத் திரிந்ததாகக் கூறுகிறுர். யாவது—ஆவுது—ஏது எனத் திரிந்ததற்கான படிநிலையை நாம் தொல்காப்பியத்திலிருந்து உய்த்துணர இஃது இடந்தருகிறது.

யாங்கு எனும் வினுச்சொல் எங்கே எவ்வாறு எனும் இரண்டு பொருளிலும் வழங்குகிறது.

"கரப்பவர்க் கியாங் கொளிக்கும் கொல்லோ" (குறள். 1070)
"யாங்காகியர்" (புறம். 191)

கன்னடத்தில் யாங்கு—யாங்கெ—யாகெ எனத் திரிந்து வழங்குகிறது. எப்பொழுது எனும் சொல் யா முதனிலை சிதையாமல் யா + பொழுது — யா வத்து (யா + பொழ்து — பொத்து — வொத்து—வத்து) எனத் திரிந்து என்றைக்கு எனப் பொருள் படுகிறது.

யாவத்து பந்திரி—என்றைக்கு வந்தீர்கள்.

யாவாக நோடிதிரி—எப்பொழுது பார்த்தீர்கள்.

———

மாநகர் கண்ட மாபெரு வெள்ளம்

இயற்கையின் திருவிளையாடல் அவ்வப்போது தமிழகத்தில் பெரு மழையாகவும் வெள்ளமாகவும் புயலாகவும் தோன்றித் தமிழக மக்களை அல்லலுக்குள்ளாக்கி வருகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் அடிக்கடி புயல் தோன்றிப் பேரழிவு செய்து வரும் செய்திகளை ஈண்டு நாம் விளக்கத் தேவையில்லை. 1952 ஆம் ஆண்டில் வீசிய பெரும்புயல் பற்றிய செய்திகளையும், அது பற்றி நம் கழகப் புலவர் பெருமழையூர் பொ. வே. சோமசுந்தரனார் இயற்றிச் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்த உணர்ச்சி மிக்க கவிதைகளையும் தமிழன்பர்கள் அறிவர்.

அடுத்து 1966 நவம்பர்த் திங்களில் வீசிய சூறைக்காற்று பல இழப்புகளை ஏற்படுத்தியதோடன்றி, 'புரோகிரஸ்' 'மெரிஹோரா' என்னும் இரண்டு கப்பல்களைச் சென்னைக் கடற்கரையில் தரை தட்டி நிற்கச் செய்தமையும், மற்றொரு கப்பல் கடற்பாறையில் மோதி பிளக்கப்பட்டமையும் தமிழகம் அறிந்த செய்திகளாகும்.

அங்ஙனமே கடந்த நவம்பர் 24, 25 ஆம் நாள்களில் தமிழகத்தில் புயலோடு பெய்த பெரு மழை காரணமாக தஞ்சை, தென்னார்க்காடு, புதுவை, செங்கை, சென்னை மாவட்டங்களில் பேரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாகச் சென்னை மாநகரில் பெய்தமழை வரலாறு காணாத பெருமழையாகும்.

செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த செம்பரம்பாக்கம் ஏரி நிறைந்து வழிய ஆரம்பித்ததன் விளைவாக ஏரி நீர்க் கதவுகள் திறந்து விடப்பட்டன. முன்னரே பெய்த மழை நீரும் ஏரியின் நீரும் கலந்து நகரின் தாழ்வான பகுதிகளில் வெள்ளமாகப் புரண்டோடத் துவங்கிற்று. இதனால் வீடு, மனை, மக்கள், செல்வம் ஆகியன இழந்தனர் பலர். பல வீடுகள் இடிந்தன; பலர் உயிரிழந்தனர்.

இங்ஙனம் நேர்ந்த பேரிடரால் ஏற்பட்ட இழப்பு ரூ. 15 கோடி இருக்குமெனத் தமிழக அரசு கருதுகிறது. 24 ஆம் நாள் விடாது பெய்த மழையின் அளவு 45 செ. மீட்டர், அஃதாவது 18 அங்குலம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெருமழை தமிழக வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். 1901 ஆம் ஆண்டிலும் 1943 ஆம் ஆண்டிலும் கனத்த மழையும் வெள்ளமும் ஏற்பட்டதுண்டு. அம் மழைகள் முறையே 9½ அங்குலம் 10½ அங்குலங்கட்கு மேல் சென்றதில்லை.

தமிழகத்தின் இத்தகைய அவலநிலையினை நேரில்காண நடுவணரசு நிதியமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம், திரு. சஞ்சை காந்தி, தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாடியா ஆகியோர் விரைந்து வந்து அல்லல்பட்ட மக்கட்கு ஆறுதல்கூறி இழப்புகளை ஈடுசெய்யத் தக்க ஏற்பாடுகள் செய்தனர்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்ய அரசு பெருமுயற்சிகள் செய்து வருகிறது. செல்வர்களும் உதவி செய்கின்றனர். இனி இத்தகைய வெள்ளம் ஏற்படாமல் இருக்க, முன்னெச்சரிக்கையுடன் தடுப்பு முறைகளைக் கண்டறிய அரசு சிந்தித்து ஆவன செய்யும் என நம்புகிறோம்

செய்திகளும் குறிப்புகளும்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் பதவி உயர்வு

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியராகப் (Reader) பணியாற்றி வந்த டாக்டர். சி. பாலசுப்பிரமணியம், எம் ஏ., எம் லிட்., பி.எச்.டி. அவர்கள் 1-12-76 முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் அமர்த்தப் பெற்றுள்ளார். தமிழ் இலக்கிய, இலக்கணத்தில் ஆழ்ந்த புலமையுடையவரும், பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரும் சிறந்த சொற்பொழிவாளருமான டாக்டர். சி. பா. பதவி உயர்வு பெற்றது அறிந்து மகிழ்கிறோம். அவர் மேன்மேலும் தமிழ்த் தாய்க்குப் பல்லாற்றானும் அருந்தொண்டாற்ற வேண்டுமென்று அவரை வாழ்த்துகிறோம்.

டாக்டர் பொற்கோ : புதிய பொறுப்பு.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் பொன். கோதண்டராமன், எம்.ஏ., பி.எச்.டி. அவர்கள் (பொற்கோ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியராக (Reader) அமர்த்தப் பெற்றுள்ளார். மொழியியல் துறையில் சிறந்த புலமையும் பேறுடுகட்குச் சென்று பல்வகைப் பயிற்சியும் பெற்றுள்ள அவர் மேன்மேலும் பதவி உயர்வு பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வாழ்த்துகிறோம்.

அரசு ஊழியர்க்கு இந்தி கட்டாயம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

நடுவண் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்தியைக் கற்றுக் கொடுப்பதற்காக நடுவண் உள்துறை அமைச்சகமும், அஞ்சல்-தந்தி பிரிவும் வெளியிட்ட உத்தரவுகள், கட்டளைகள், குறிப்புக்கள் அனைத்தும் மற்றும் குடியரசுத் தலைவரின் இது தொடர்பான உத்தரவும் செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றம் 1971 சன 29 அன்று தீர்ப்பளித்தது.

அதை எதிர்த்து நடுவண் அரசு உச்சநீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்தது. அதனை உசாவிய தலைமை நீதிபதி ஏ. என். ரே நீதிபதிகள் எம். எச் பெக். ஜஸ்வந்த்சிங் ஆகியோர் நடுவண் அரசு உள்துறை அமைச்சகமும், குடியரசுத் தலைவரும் அனுப்பிய ஆணைகள் செல்லும் என்று தீர்ப்பு கூறியுள்ளனர். அரசு ஊழியர் இந்தி கற்பதைக் கட்டாயமாக்கும் உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு வழங்கப் பெற்றுள்ளது (தினமணி 7-12-76).

நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு

தமிழ்நாட்டில் கீழ்நிலை நீதிமன்றங்களில் குற்ற இயல் வழக்குகளில் தமிழில் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும் என்னும் திட்டத்தை முன்னிட்டு 14-11-76 இல் சென்னை இராசாசி மண்டபத்தில் ஒரு விழா நடத்தப் பெற்றது. விழாவிற்குத் தமிழ்நாடு ஆளுநர் மாண்பமை மோகன்லால் சுகாதியா அவர்கள் தலைமை தாங்கினார்கள். 'குற்ற விசாரணை முறைச் சட்டம். இந்தியத் தண்டனைச் சட்டம், இந்தியச் சான்றுரைச் சட்டம் ஆகிய தமிழாக்கச் சட்ட நூல்களை நடுவண் அரசின் நீதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டார்கள்.

நூலை வெளியிட்டு அவர் உரையாற்றியபோது,

"இந்தி ஆட்சித்துறைக்கு வேண்டிய மொழியாயிற்றே தவிர, தேசிய (நாட்டு) மொழியாகவில்லை, எல்லா மொழிகளும் ஆட்சிமொழி

யாகிவிட முடியாது என்பதாலேயே மும்மொழித் திட்டம் உருவாக்கப் பட்டது. எதையும் மொழி கூட்டி வைக்கவும் செய்யும், பிரித்து வைக்க வும் செய்யும். நம்நாடு ஒன்றாக இருப்பதற்கு மொழி குறுக்கே வந்து தடையாக இருக்கக்கூடாது.

"தமிழ் நீதித்துறையில் தீர்ப்பு மொழியாகும் திட்டத்தை நான் துவக்கி வைக்கும் பேறு பெற்றது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். அறி வியலில் உலக முழுதும் பொதுவாக வழங்கும் குறியீடுகளை வைத்துக் கொண்டு மற்றவைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் புத்தகங்கள் எழுத வேண்டும்" என்றார்.

ஆளுநர் அவர்கள் தமது தலைமை உரையில்,

"மேலும் மேலும் பல சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் போது காலப் போக்கில் எல்லா நீதிமன்றங்களிலும் தமிழ்மொழி தீர்ப்பு வழங்குவதற்குரிய மொழியாகி விடும்" என்றார்.

முன்னாள் உயர்நீதிமன்ற நடுவர் உயர்திரு. எஸ். மகராஜன் அனை வரையும் வரவேற்றார். அரசு தலைமைச் செயலாளர் உயர்திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நன்றி நவின்றார்.

தமிழ்மறைச் செல்வி தையல் நாயகி

குடந்தைத் திருவாளர் ச. மாணிக்கனார் அவர்களும், நாகரத்தினம் அம்மையார் அவர்களும் ஆற்றிய நற்றவப் பயனால் 24-6-63 இல் பிறந்த



அவர்தம் திருமகள் தையல் நாயகி 1330 அருங்குறட்பாக்களைப் பழு தறப் பயின்று, மனப்பாடம் செய்து குறிப்பிட்டு எந்தக் குறட்பாவின் எண்ணைக் கூறினாலும் அப் பாட் டினை அப்படியே ஒப்புவிக்கும் திறம் பெற்று விளங்குவதும், அத் துடன் சிவபுராணம், அபிராமியந் தாதி, கந்தர் கலிவெண்பா, நீதி நெறி விளக்கம் ஆகிய நூல்களையும் நன்கு கற்றுள்ளமையும் கேட்டு மகிழ்கிறோம். குடந்தை இராணி சுப்பையர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பில் படித்து வரும் இச்சிறு பெண்ணின் பயிற் றாசிரியராகத் திரு கதிர் தமிழ் வாணன் அவர்கள் அமைந்து சிறந்த பயிற்சி அளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மறைச் செல்வி தையல் நாயகிக்கு எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித் துக் கொள்ளுகிறோம்.

மாணவர்களுக்குப் பல் பாதுகாப்புத் திட்டம்

சென்னை நகரிலுள்ள கல்லூரி மாணவர்களுக்குப் பற்களைப் பாது காப்பது எப்படி என்பது பற்றி அறிவுறுத்துவதற்கென அரசினர் ஒரு திட்டம் வகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இக் கருத்தை

அண்மையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு. கே. மோகனரங்கம் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

பல நோய்கட்குப் பல் நோய்களே அடிப்படைக் காரணங்களாய் அமைவதால், மாணவப் பருவத்தில் பற்களை அவ்வப்போது மருத்துவ ஆய்வு செய்தல் வேண்டும். அத்துடன் மாணவர்களே பல் பாதுகாப்பு பற்றிய நூல்களைப் படிக்குமாறு செய்தல் வேண்டும். இத்தகைய நன் நோக்கத்துடனேயே 'வாய் பல் மருத்துவம்', 'பல் பாதுகாப்பு' ஆகிய நூல்களைக் கழகம் வெளியிட்டுள்ளது என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

தமிழ் 'கா. சு.' நினைவு இலக்கியக் குழு

நவம்பர் 13, 14 ஆம் நாள்களில் குழுத்தலைவர் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில், கா. சு. பிள்ளை நினைவுவிழா நடைபெற்றது. இவ் விழாவில் கவியரங்கம், பட்டி மன்றம், கருத்தரங்கம் ஆகியனவும் இடம் பெற்றன.

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் முத்தமிழ் விழா

தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில் நவம்பர்த் திங்கள் 24, 25, 26 ஆம் நாள்களில் முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற்றது. பேரவையின் ஆண்டு மலரான 'பொதிகை' இவ்வாண்டு மறைமலையடிகள் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலராக வெளியிடப் பெற்றது.

'அச்சுக் கலை' நூல் திறனாய்வு

திரு. மா. சு. சம்பந்தம் அவர்கள் எழுதிய 'அச்சுக்கலை' என்னும் நூலின் திறனாய்வுக் கூட்டம் 26-10-76 அன்று சென்னை, ஒய். எம். சி. ஏ. (பட்டிமன்றம்) சார்பில் நடைபெற்றது. 'மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர்' திரு. இரா. முத்துக்குமாரசாமி தலைமையில் திரு. க. த. திருநாவுக்கரசு, (உலகத் தமிழாராய்ச்சி நிலையம்) நூலைத் திறனாய்வு செய்தார். நூலாசிரியர் திரு. மா. சு. சம்பந்தம் தமக்கு நூலெழுதும்போது ஏற்பட்ட பட்டறிவுகளை விளக்கிக் கூறினார். தொடக்கத்தில் செயலர் கே. பக்தவத்சலம் வரவேற்றார். முடிவில் திரு. ஊ. செயராமன் நன்றி நவின்றார்.

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் 138 ஆவது பிறந்தநாள்.

அருட்டிரு தண்டபாணி அடிகளின் 138 ஆவது பிறந்தநாள் விழா 18-11-76 இல் கந்தகோட்டத்தில் சென்னை இரும்பு வணிக, ஊழிய அன்பர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது அடிகளின் திருவுருவத்திற்கு வழிபாடுகளும் நடைபெற்றன. அடிகளாரின் கொள் பேரன் புலவர் தி. மு. சங்கரலிங்கம் அவர்கள் அடிகளின் வரலாறு குறித்துச் சிறப்புரை ஆற்றினர்.

திரு. சிவசைலம் பிள்ளை மறைவு

கழகப் பாடநூலாசிரியரும் தமிழக அரசுக் கல்வித் துறையில் நீண்ட நாள் நற்பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு. சிவசைலம் பிள்ளை எம். ஏ., எல். டி. தம் 80-வது அகவையில் 25-11-76 அன்று சென்னையில் காலமானார். ஆறுதல் அடைவோம்.

மதிப்புரை

பூங்கோதை

[ஆசிரியர் : கவிஞர் கலைக்கூத்தன், தமிழ்ப் படைப்பு மேம்பாட்டு மன்றம், பம்பாய்—400019, விலை ரூ. 9-00.]

பூங்கோதை கவிதை வடிவில் அமைந்துள்ள ஓர் அரிய சமுதாய சீர்திருத்தக் கதை. அற உணர்வு மிக்க தமிழ்க் குடும்பத்தின் அறநெறிக் காப்பியமாகத் திகழ்கிறது இந்நூல். ஏறக்குறைய கண்ணகியின் வாழ்வில் கண்ட இன்னல்களே பூங்கோதையின் வாழ்விலும் காணக் கிடக்கின்றன. கதை சுவையானது. இலக்கிய நயம்—கற்பனை வளம்—சொற்சுவை—பொருட்சுவை நிரம்பியது. பம்பாய் தமிழ்ச் செல்வர்களின் உதவியால் இந்நூல் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதும், பாராட்டத் தக்கதுமாகும்.

திருமந்திர நெறி

[ஆசிரியர் : திருக்குறள்வேள் ஜி. வரதராஜன். மாயூரம். தெய்வத் தமிழ் மன்றம். விலை ரூ. 6-00]

சமயக் கருத்துகளைப் பரப்பும் நோக்கத்துடன் மாயூரம். தெய்வத் தமிழ் மன்றத்தார் செய்துவரும் அரிய பணிகளுள் இவ் வெளியீடும் ஒன்றாகும். குறள் எப்படி உலகெங்கும் பரவவேண்டிய தொன்றாகுமோ அப்படியே தமிழ்ச் சமய நெறியாகிய "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் திருமந்திர நெறியும் எங்கும் பரவவேண்டிய உயர்நெறியாகும். திருமந்திரம் என்ன கூறுகிறது—திருமூலர் யார் என்பன போன்ற செய்திகளை அறிய இந்நூல் பெரிதும் துணைபுரியும்.

அப்பர் அருட் செய்தி

[ஆசிரியர் : டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி. மாயூரம். தெய்வத் தமிழ்மன்ற வெளியீடு. விலை ரூ. 1-50]

சமய குரவர்களுள் அப்பரடிகளின் அருட்பணி சாலச் சிறந்த ஒன்றாகும். உள்ளத்தைச் சமயத்தின்பாற் செலுத்தி நடைமுறை வாழ்வில் அருள் நெறியினையும் உண்மையான பத்திநெறியினையும் கடைப்பிடித்து உய்ய வழி காட்டுவன அப்பரின் சொல்—செயல்—வாழ்க்கை ஆகியனவாகும். அத்தகைய அருட் பெரியாரைப் பற்றி அறிந்துகொள்ள வழிகாட்டும் அரிய சிறிய கையேடாக அமைந்துள்ளது இவ் வெளியீடு.

அடிகள் நூற்றாண்டு விழா வெளியீடு

[தொல்காப்பியர் கழக வெளியீடு 2536 வே. பெ. கோவில் தெரு, தஞ்சாவூர்—1]

இச் சிறு வெளியீட்டில் மறைமலையடிகளார் மணி மொழிகள் சிலவும், அவருடைய வரலாற்று மாண்பும் கூறப்பட்டுள்ளன. சை. சி. நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர். வ. சுப்பையா பிள்ளை அவர்கள் எழுதிய "அடிகளார் தமிழர் நல்வாழ்விற்காகக் கடைப் பிடித்த அடிப்படைக் கொள்கைகள்" என்னும் பகுதி சேர்க்கப் பெற்றுள்ளது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

பிரபதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

ஆராய்ச்சி நெறிமுறைகள்—டாக்டர் ஈ. சா. விசுவநாதன்	6	00
புதையல்—மு. கருணாநிதி	15	00
சுவாமி இராமதாசர் அருள்மொழிகள்—கருமாரிதாசர்	2	00
பட்டிமன்ற விவாதங்கள்—பொ. ம. ராசமணி	4	00
காந்தீயத் தலைவர் காமராஜ்—த. மனோகரசிங்	4	50
உலகம் சுற்றிவந்தோம்—V. G. பன்னீர்தாஸ் - சந்தோஷம்	9	00
நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்—தே. லூர்து	7	00
புதுமைப்பித்தன் கதைகள்—வே. மு. பொதியவெற்பன்	3	00
காவியப் பாவை—கவிஞர் முடியரசன்	4	00
மின் உலகம்—நீல. பத்மநாபன்	4	00
ஜெயகாந்தன் ஒரு விமர்சனம்—எஸ். தோதாத்ரி	4	00
மனமாற்றம்—தமிழ்க் குடிமகன்	6	00
இலக்கிய நெஞ்சம்—மு. பி. பாலசுப்பிரமணியன்	4	00
பூக்கள் (கவிதை)—கவிஞர் பூ. முனியாண்டி	2	50
தொல்காப்பியருக்குமுன் தமிழில் காவியங்கள்—மு. மாணிக்கம்	5	00
பிம்பம் (சிறுகதைகள்)—தேசிய எழுத்தாளர் முன்னணி	4	00
புதிய பூ—மகரிஷி	6	50
சிநேக புஷ்பங்கள்—தொகுப்பு	5	00
ஏன்—சிவசங்கரி	8	00
டைவர்ஸ்—பி. வி. ஆர்.	8	00
அர்த்தமுள்ள இந்துமதம் (மூன்றும் பகுதி) —கவிஞர் கண்ணதாசன்	2	50
சங்க காலத்திற்கு முன்—ம. ரா. போ. குருசாமி	5	00
இலக்கியத் திறனாய்வு I—ஜான் சாமுவேல்	4	50
துறைமுகம்—சுரதா	6	05
இஸ்லாமும் இன்பத் தமிழும் —அல்ஹாக் கலாநிதி, முகம்மது உவைஸ்	7	00
கவி பிறந்த கதை—பி. வி. கிரி	7	00
கிளாரிந்தா—அ. மாதவையா	10	00
சி. எஸ். ஒரு கண்ணோட்டம்—மணியன்	7	50
Sabarimalai and its sasta—P. T. Thomas	2	50
Premitive religions in India—Presler	10	00
Bhakti: Hindu and Christian—Stephen Neill	7	00
Modern Studies in Tamil—Dr. P. N. Kothandaraman	7	00
The Status of Women in Tamil Nadu during the Sangam age—Dr. C. Balasubramaniam.	5	00
Path way to God trod by Saint Ramalingar —G. Vanmeeganathan	45	00
Kuruntokai—Dr. M. Shanmugam Pillai & David Ludden	80	00

கழகப் புதிய வெளியீடுகள்

காவிரி வளம்

—டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,பி.எச்டி.

காவிரியாற்றின் தோற்றம், அதுபாயும் பகுதிகள், ஆங்காங்குள்ள திருப்பதிகள், காவிரிக்கரைக் கல்வெட்டுகள், காவிரிக்கரை ஊர்களில் வழங்கும் நாட்டுப் பாடல்கள் ஆகியன இந்நூலில் விளக்கப்படுகின்றன. ஆற்றங்கரை நாகரிகங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். ரூ. 3 50

திருக்குறள் அதிகாரமுறை நூற்பா

—மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை

திருக்குறள் 133 அதிகாரங்களின் பெயர்களையும் மனப்பாடம் செய்வதற்கேற்ப 12 நூற்பாக்களாக அமைத்துள் ளார் இந்நூலாசிரியர். ரூ. 0 30

தமிழ் - ஆங்கிலம் அகராதி (Tamil English Dictionary)

இது கழகத்தின் அறநிலையங்களில் ஒன்றாகிய தென்னிந் திய தமிழ்ச் சங்க வெளியீடாகும். இதனைத் தொகுத்தவர் பேராசிரியர் கா. சு. பிள்ளை தமிழாராய்ச்சி மன்றத்தின் இயக்குநராக விருந்த உயர்திரு. இரா. பாலகிருட்டிண முதலி யார் பி. ஏ., எல்.டி. அவர்களாவர். இதுகாறும் வெளிவந்துள்ள தமிழ் ஆங்கில அகராதிகளோடு இதனை ஒத்துப்பார்க்கும் அறிஞர்கட்கு இதன் பயன் நன்கு தெரியும். இதற்கு உலகத் தமிழ் மன்றத்தின் இயக்குநர் உயர்திரு. டாக்டர். எஸ். வி. சுப்பிரமணியம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். 538 பக்கங்களைக் கொண்ட இந்நூல் உயர்ந்த அழுத்தமான துணிக்கட்டடம் உடையது. குறைந்த விலை. ரூ.. 13 00

சட்ட நூல்கள்

உயர்நீதிமன்ற நடுவராக இருந்து ஓய்வு பெற்ற உயர்திரு எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும் தமிழ் நாடு (சட்டத்துறை) ஆட்சிமொழி ஆணையம் அண்மையில் தமிழகத்திலுள்ள எல்லாக் குற்ற வழக்கு நீதிமன்றங்களிலும் தமிழில் தீரப்பு எழுதுவதற்கேற்ப முதற்கண் மூன்று நூல் களை வெளியிட்டுள்ளது. அவை பின்வருமாறு:

குற்ற விசாரணை முறைச் சட்டம்
(The Code of Criminal Procedure) விலை ரூ. 17 50

இந்திய சாட்சியச் சட்டம்
(The Indian Evidence Act ரூ. 5 50

இந்திய தண்டனைச் சட்டம்
(The Indian Penal Code) ரூ. 11 50

அப்பர் அச்சகம், சென்னை-1.